



# தினபூமி

thinaboomi.com










**ஒப்படைத்தார் பிரதமர் மோடி: ஜி - 20 அமைப்பின் தலைமை பொறுப்பை ஏற்றது பிரேசில்**

...2-ம் பக்கம்

**காலநிலை மாற்ற உச்சி மாநாடு: துபாய் சென்றடைந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு**

...3-ம் பக்கம்

**டி-20 உலகக் கோப்பை தொடர்: இந்திய அணி கேப்டனாக ரோகித் சர்மா தேர்வாகிறார்**

...7-ம் பக்கம்





மன்னார் வளைகுடா கடல் பகுதியில் பலத்த சூறாவளி காற்று உருவாகி புயலாக மாறி இருப்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீனவர்களுக்கு தெரிவிக்கும் வகையில் பாம்பன் துறைமுகத்தில் புயல் எச்சரிக்கை 1 ஆம் எண் கூண்டு நேற்று ஏற்றப்பட்டது.

### மசோதாக்கள் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில்

# முதல்வரை அழைத்து பேசி தீர்வு காணுங்கள்

## தமிழ்நாடு கவர்னருக்கு சுப்ரீம் கோர்ட் அறிவுறுத்தல்

புதுடெல்லி, டிச. 02-

சட்டத்தை செயலிழக்க செய்யவோ, முடக்கவோ கவர்னருக்கு அதிகாரம் இல்லை. 'கவர்னர் - முதல்வர் இடையே பல்வேறு விவகாரங்களுக்கு தீர்வு காண வேண்டியுள்ளது. எனவே, முதல்வரை கவர்னர் அழைத்து பேசி தீர்வுகாண வேண்டும்; இல்லையெனில் உத்தரவு பிறப்பிக்க நேரிடும்' என தமிழக கவர்னருக்கு சுப்ரீம் கோர்ட் அறிவுறுத்தியுள்ளது.

**10 மசோதாக்கள்...**

தமிழக சட்டசபையில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக பல்வேறு சட்ட மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு கவர்னரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டன. ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட 2 மசோதாக்கள் உட்பட 10 மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்கவில்லை. சட்ட மசோதாக்களுக்கு அனுமதியளிப்பதற்கு கவர்னருக்கு கால நிர்ணயம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி, கவர்னர் ஆர்.என்.ரவிக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு மனு தாக்கல் செய்தது.

**அதிகாரம் இல்லை...**

இந்த வழக்கு நேற்று (டிச.,1) விசாரணைக்கு வந்தது. வாதத்தின்போது நீதிபதிகள் கூறியதாவது., சட்டத்தை செயலிழக்க செய்யவோ, முடக்கவோ கவர்னருக்கு அதிகாரம் இல்லை. தற்போதைய முட்டுக்கட்டையை கவர்னர் தரப்புதான் தீர்க்க வேண்டும் என விரும்புகிறோம். கவர்னர் - முதல்வர் இடையே பல்வேறு விவகாரங்களுக்கு தீர்வு காண வேண்டியுள்ளது. எனவே, முதல்வரை கவர்னர் அழைத்து பேசி தீர்வுகாண வேண்டும்; இல்லையெனில் உத்தரவு பிறப்பிக்க நேரிடும். ஒருவேளை கவர்னர் முதல்வரை அழைத்து பேசி தீர்வுகாண முயற்சித்தால் அதனை நாங்கள் வரவேற்போம்.

**பல்வேறு கேள்விகள்...**

கவர்னர் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கலாம், அளிக்காமல் வைக்கலாம் அல்லது ஜனாதிபதிக்கு அனுப்பலாம். முதல்முறை மசோதா அனுப்பப்பட்டபோதே ஜனாதிபதிக்கு அனுப்பி இருக்கலாமே. ஒரு முறை திருப்பி அனுப்பிய பின் அதை மறுநிறைவேற்றம் செய்து அனுப்பிய பிறகு ஜனாதிபதிக்கு அனுப்ப முடியாது. Withheld என முடிவெடுத்த பின் மசோதாக்களை ஏன் ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும்?. இவ்வாறு பல கேள்விகளை எழுப்பினர். பின்னர் வழக்கு விசாரணையை டிசம்பர் 11ம் தேதிக்கு சுப்ரீம் கோர்ட் ஒத்திவைத்தது.

# புயலை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்க வேண்டும்

## 12 மாவட்ட கலெக்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

சென்னை, டிச. 02-

தமிழகத்தில் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்திய முதல்வர் மு.க. ஸ்டாலின் புயலை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று 12 மாவட்ட கலெக்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

வடகிழக்கு பருவமழை மற்றும் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து 12 கடலோர மாவட்ட கலெக்டர்களுடன் காணொளி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையில் பாதிப்புகளை சரிசெய்தல், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. மேலும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அதிகாரிகளுக்கு முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

ஆலோசனை கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது., புயலால் பாதிக்கப்படும் மாவட்டங்களில் பல்துறை மண்டலக் குழுக்களை அமைக்க வேண்டும். புயலை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். மழைநீர் தேங்காதவாறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு எச்சரிக்கை வழங்கி நிவாரண முகாம்களில் தங்க வைக்க வேண்டும். முகாம்களில் தங்கவைக்கப்படும் மக்களுக்கு உணவு, குடிநீர் வழங்க வேண்டும்.

மழையின்போது போக்குவரத்து நெரிசல் ஏற்படாத வண்ணம் போக்குவரத்து காவலர்கள் செயல்பட வேண்டும். போக்குவரத்து காவலர்களை அதிகளவில் பணியில் ஈடுபடுத்தி போக்குவரத்து நெரிசலை விரைந்து சரி செய்ய வேண்டும் புயல் எச்சரிக்கையை தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் சமையல் கூடங்களை தயார் நிலையில் வைக்க வேண்டும். அரசு மருத்துவமனைகளில் அவசர சிகிச்சை பிரிவு 24 மணி நேரமும் செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும். மழைக்காலத்தில் அனைத்து துறையினரும் இணைந்து செயல்பட வேண்டும்.

மழைக் காலங்களில் மின்சார விபத்துகள் ஏற்படாத வகையில் மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும். புயலால் சாலைகளில் விழும் மரங்களை உடனடியாக அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்ட அமைச்சர்கள் தலைமைச் செயலாளரிடம் உதவிகளை பெற்றுக் கொள்ளலாம். அனைத்து உதவிகளையும் செய்ய தமிழக அரசு தயாராக உள்ளது. புயலால் ஏற்படும் தாக்கத்தை திறம்பட எதிர்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

### வலுப்பெறும் 'மிக்ஜம்' புயல்: வரும் 5-ம் தேதி

# நெல்லூர்-மசூலிப்பட்டினம் இடையே கரையை கடக்கும்

## இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, டிச. 02-

வங்கக் கடலில் வலுப்பெறும் மிக்ஜம் புயல் வரும் 5-ம் தேதி ஆந்திர மாநிலம் நெல்லூர் - மசூலிப்பட்டினம் இடையே கரையக் கடக்கும் என்று தெரிவித்துள்ள இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை உள்பட வட கடலோர மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி, நேற்று முன்தினம் தாழ்வு மண்டலமாக மாறி, இன்று (சனிக்கிழமை) புயலாக உருவாகக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கணித்து இருந்தது. அதில் தற்போது மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது. தற்போது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று இருக்கும் நிலையில், இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற உள்ளது.

இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை (3-ம் தேதி) புயலாக வலுப்பெற உள்ளது. இந்த புயல் வரும் 5-ம் தேதி ஆந்திர மாநிலம் நெல்லூர் - மசூலிப்பட்டினம் இடையே கரையக் கடக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. முன்னதாக 4-ம் தேதி வட தமிழகம் - மசூலிப்பட்டினத்திற்கு இடையே புயல் கரையைக் கடக்கும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது வங்கக் கடலில் உருவாகும் இந்த புயலுக்கு மிக்ஜம் எனப் பெயரிடப்பட உள்ளது. மியான்மர் நாடு வழங்கும் இந்தப் பெயர் அந்நாட்டில் பாயும் ஒரு நதியின் பெயர் ஆகும். இந்த நிலையில் புயல் கரையைக் கடக்கும் இடம் மாறியுள்ளதால், கரையைக் கடக்கும் நேரமும் தாமதமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வானிலை ஆய்வுமைய தென்மண்டல தலைவர் பாலச்சந்திரன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது; சென்னைக்கு 780 கி.மீ. தென் கிழக்கில் காற்றழுத்த தாழ்வுமண்டலம் மையம் கொண்டுள்ளது. இது இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலமாக வலுப்பெற்று, பின் புயலாக உருவாகவுள்ளது.

டிசம்பர் 3-ல் உருவாகும் புயல், 5-ம் தேதி கரையை கடக்கிறது. இதன் காரணமாக இன்று டெல்டா மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளது. வருகிற 3-ம் தேதி சென்னை முதல் கடலூர் வரையிலான வட கடலோர மாவட்டங்களில் மிக கனமழை பெய்யும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# திருவள்ளூர் மாவட்டத்திற்கு வரும் 4-ம் தேதி ரெட் அலர்ட்

சென்னை, டிச. 02-

திருவள்ளூர் மாவட்டத்திற்கு வரும் 4-ம் தேதி மிக அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் வலுப்பெறும் புயல் டிசம்பர் 5-ம் தேதி ஆந்திரம் அருகே கரையைக் கடக்க உள்ளது. கரையைக் கடக்கும்போது சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒருசில இடங்களில் கன முதல் மிகக் கனமழையும் பெய்யக்கூடும். கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

குறிப்பாக டிசம்பர் 4-ம் தேதி மாலை திருவள்ளூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் அதி கனமழைக்கான ரெட் அலர்ட் கொடுக்கப்பட்டுள்ளதால், மக்கள் அனைவரும் பாதுகாப்புடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### தொடர் மழை எதிரொலி:

# தமிழகத்தில் 1,500 ஏரிகள் முழுமையாக நிரம்பியது

சென்னை,டிச. 02-

**தமிழகத்தில் மொத்தமுள்ள 14,139 ஏரிகளில் 1,500 ஏரிகள் 100 சதவீதம் முழுமையாக நிரம்பி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை போதிய அளவு இன்னும் பெய்யவில்லை. அக்டோபர் மாதத்தில் இருந்து இதுவரை 44 செ.மீ. அளவுக்கு மழை கிடைத்திருக்க வேண்டும். ஆனால் 35 செ.மீ. அளவுக்குத்தான் மழை பெய்துள்ளது. அதாவது 6 சதவீதம் குறைவாக உள்ளது. இதன் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் ஏரி, குளங்கள் இன்னும் முழுமையாக நிரம்பவில்லை.

தமிழகத்தில் மொத்தம் 14,139 ஏரிகள் உள்ளன. இவற்றில் 1,500 ஏரிகள் மட்டும்தான் 100 சதவீதம் முழுமையாக நிரம்பி உள்ளன. 2 ஆயிரம் ஏரிகள் 75 சதவீதம் அளவுக்குதான் நிரம்பி இருக்கின்றன. இதுதவிர 2 ஆயிரம் ஏரிகள் 50 சதவீதமும், 3 ஆயிரம் ஏரிகள் 25 சதவீதமும் நிரப்பி உள்ளன.

கோவை, நீலகிரி, தேனி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி, ராமநாதபுரம் மாவட்டங்களில் அதிக அளவு மழை பெய்த காரணத்தால் இந்த மாவட்டங்களில் ஏரி, குளங்கள் நிரம்பி உள்ளன. ஆனால் வட மாவட்டங்களில் போதிய அளவு மழை பெய்யாததால் இன்னும் ஏரிகள் நிரம்பாமல்தான் உள்ளன. இந்த மாதம் (டிசம்பர்) மழை காலம் என்பதால் இந்த மாதத்தில் ஓரளவு மழை பெய்தால் ஏரிகள் இன்னும் நிரம்ப வாய்ப்பு உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 31 கைதிகள் விடுதலைக்கு தமிழக கவர்னர் ஒப்புதல்

சென்னை, டிச. 02-

**31 கைதிகள் விடுதலைக்கு தமிழ்நாடு கவர்னர் ஆர்.என். ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.**

மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க உத்தரவிட கோரியும், நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள கோப்புகளில் கையெழுத்திட கோரியும் தமிழக அரசு தாக்கல் செய்த ரிட் மனு மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு முன் நடைபெற்று வருகிறது. நேற்று விசாரணையின் போது கவர்னர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், நீண்ட நாள் சிறையில் உள்ள 31 கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்ய கவர்னர் ஒப்புதல் அளித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டநாள் சிறையில் உள்ள 31 கைதிகளை முன்விடுதலை செய்ய தமிழ்நாடு கவர்னர் ரவி ஒப்புதல் தெரிவித்துள்ளார். கைதிகளை முன்விடுதலை செய்யும் விவகாரத்தில் 71 கோப்புகளில், 31 கோப்புகளுக்கு தமிழ்நாடு கவர்னர் அனுமதி அளித்துள்ளார். சுப்ரீம் கோர்ட் கண்டனத்துக்கு பணிந்து 31 கைதிகள் விடுதலைக்கு கவர்னர் ஒப்புதல் தந்துள்ளார். மேலும் 39 கைதிகளின் முன்விடுதலை வழங்கும் கோப்புகளில் கையெழுத்திட கவர்னர் ஆர்என் ரவி மறுப்பு கூறியுள்ளார். டிஎன்பிஎஸ்சி தலைவர், உறுப்பினர்கள் நியமனம் தொடர்பான கோப்புகள் அனைத்தையும் கவர்னர் ஆர்.என்.ரவி திருப்பி அனுப்பியுள்ளார்.

### புயல் எச்சரிக்கை எதிரொலி:

# 9 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்

சென்னை, டிச. 02-

**தமிழகத்தில் புயல் எச்சரிக்கை காரணமாக 9 துறைமுகங்களில் 1-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது.**


வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி, தற்போது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது 3-ம் தேதி வங்கக்கடலில் புயலாக வலுப்பெறக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்த புயலுக்கு 'மிக்ஜம்' என்று பெயரிடப்பட உள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமானது புதுச்சேரிக்கு கிழக்கு தென்கிழக்கு திசையில் 900 கி.மீ. தொலைவிலும், சென்னைக்கு தென்கிழக்கு திசையில் 800 கி.மீ. தொலைவிலும் நிலைகொண்டுள்ளதாகவும், அதன்பின் புயலாக மாறி தெற்கு ஆந்திர மாநிலம் நெல்லூர் - மசூலிப்பட்டினத்திற்கும் இடையே 5-ம் தேதி மாலை கரையை கடக்கும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. இந்த நிலையில், சென்னை, எண்ணூர், காட்டுப்பள்ளி, காரைக்கால், புதுச்சேரி, தூத்துக்குடி, கடலூர், நாகை, பாம்பன் ஆகிய 9 துறைமுகங்களில் புயல் உருவாகக்கூடிய வானிலை சூழல் உருவாகியுள்ளதை குறிக்கும் 1-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டு உள்ளது. மேலும், சூறைக்காற்று வீசுவதால், புதுச்சேரி மற்றும் காரைக்கால் மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| ↑ 492.75 | ↑ 134.75 |
| பாயிண்ட் 67481.19 | பாயிண்ட் 20267.9 |



**தங்கம்**
1 சவரன் ₹46,800
1 கிராம் ₹5,850



**வெள்ளி**
1 கிலோ ₹82,500
1 கிராம் ₹82.50

**டாலர்** ₹83.34

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



# காசா மீது மீண்டும் தாக்குதலை தொடங்கியது இஸ்ரேல் ராணுவம்

**டெல் அவிவ், டிச. 02-**

காசா மீது இஸ்ரேல் ராணுவம் மீண்டும் தாக்குதலை தொடங்கியுள்ளது.

ஹமாஸ் பயங்கரவாதிகள் இஸ்ரேல் நாட்டிற்குள் நுழைந்து கண்மூடித்தனமான வகையில் தாக்குதல் நடத்தினர். இதில் 1,200 பேர் பலியானார்கள். அதுமட்டுமல்லாமல் 240 பேரை பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

இதனால் ஹமாஸுக்கு எதிராக போர் பிரகடனம் செய்த இஸ்ரேல், காசா மீது தாக்குதல் நடத்தியது. சுமார் 46 நாட்கள் இடைவிடாத தாக்குதலில் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். இதனால் உலக நாடுகள் குறிப்பாக அமெரிக்கா, கத்தார், எகிப்து ஆகிய நாடுகள் போர் நிறுத்தம் ஏற்பட முயற்சி மேற்கொண்டன.

இதன் பயனாக கடந்த 24-ம் தேதி வெள்ளிக்கிழமை இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டது. ஒரு பிணைக் கைதியை விடுவிக்க 3 பாலஸ்தீனர்களை இஸ்ரேல் விடுதலை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் ஒப்பந்தம் ஏற்பட்டது.

முதல் நான்கு நாள் போர் நிறுத்தத்தின் போது 50 பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். 150 பாலஸ்தீனர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அதன்பின் இரண்டு நாட்கள் இடைக்கால போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட்டது. நேற்று முன்தினம் மேலும் ஒரு நாள் நீட்டிக்கப்பட்டது.

7-வது நாள் இடைக்கால போர் நிறுத்தத்திற்கு பேச்சுவார்த்தை நீண்டு கொண்டே சென்றது. ஹமாஸ் அமைப்பினர் அனைத்து பாலஸ்தீனர்களையும் சிறையில் இருந்து விடுதலை செய்ய வேண்டும். நாங்கள் பிடித்து வைத்துள்ள இஸ்ரேல் ராணுவத்தினர் அனைவரையும் விடுதலை செய்கிறோம் எனத் தெரிவித்தது.

ஆனால், இஸ்ரேல் ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் செயல்பட முடியும் எனத் தெரிவித்தது. இதனால் இழுபறியான நிலையில் கடைசி நிமிடத்தில் போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதனால் 7-வது நாளான நேற்று முன்தினம் ஹமாஸ் அமைப்பினர் பிணைக்கைதிகளை விடுவித்தனர்.

இஸ்ரேல் சிறையில் இருந்து பாலஸ்தீனர்கள் விடுவிக்கப்பட்டனர். இந்திய நேரப்படி நேற்று காலை 10.30 மணியுடன் ஏழு நாள் போர் இடைநிறுத்தம் முடிவுக்கு வந்தது. இதனால் போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுமா? என்ற கேள்வி எழுந்தது.

இதற்கிடையே பிணைக் கைதிகள்- பாலஸ்தீனர்கள் விடுதலை பரிமாற்றத்திற்காக இடைக்கால போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுவதை விரும்புவதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. மத்தியஸ்தராக செயல்பட்டு வந்த அமெரிக்கா, கத்தார், எகிப்து நாடுகள் இடைக்கால போர் நிறுத்தத்தை நீட்டிக்க முயற்சி மேற்கொண்டு வந்தன.

இந்த நிலையில் ஹமாஸ் இடைக்கால போர் நிறுத்த செயல்பாட்டை மீறி விட்டது. கூடுதலாக இஸ்ரேல் பகுதி மீது தாக்குதல் நடத்தியது. இதனால் இஸ்ரேல் ராணுவம் காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பிற்கு எதிராக தாக்குதலை மீண்டும் தொடங்கியுள்ளது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது. இதனால் ஏழு நாட்கள் போர் நிறுத்தம் முடிவுக்கு வந்ததுள்ளது.

# ஜி-20 அமைப்பின் தலைமை பொறுப்பை ஏற்றது பிரேசில்



**ரியோ டி ஜெனிரோ, டிச. 02-**

ஜி-20 அமைப்பின் தலைமை பொறுப்பை பிரேசில் நேற்று முதல் முறைப்படி ஏற்றுள்ளது. அடுத்த உச்சி மாநாடு பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் அடுத்த ஆண்டு நவம்பர் இறுதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

ஜி-20 உச்சி மாநாடு டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் கடந்த செப்டம்பர் மாதம் சிறப்பாக நடைபெற்றது. அமைப்பின் தலைவரான இந்தியா, ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இந்த மாநாட்டை நடத்தியது.

இந்த மாநாட்டில் அமெரிக்கா, சீனா, ரஷியா, இங்கிலாந்து, கனடா உள்ளிட்ட வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். ஜி-20 மாநாடு சிறப்பாக நடைபெற்ற பின்னர், அமைப்பின் அடுத்த ஆண்டுக்கான தலைவர் பொறுப்பை பிரேசில் அதிபர் லூயிஸ் லூலா டாசில்வாவிடம் பாரம்பரிய முறைப்படி பிரதமர் மோடி ஒப்படைத்தார்.

இந்த நிலையில், அதிகாரம் மிக்க இந்த அமைப்பின் தலைவர் பதவியை நேற்று முதல் பிரேசில் நாடு முறைப்படி அலங்கரித்துள்ளது. அத்துடன் அடுத்த உச்சி மாநாடு பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் அடுத்த ஆண்டு நவம்பர் இறுதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

### வழக்கை முடித்து தர

# 20 லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கிய அமலாக்கத்துறை அதிகாரி கைது

**திண்டுக்கல், டிச. 02-**

திண்டுக்கல்லில், வழக்கை முடித்து தருவதாக ரூ.20 லட்சம் லஞ்சம் வாங்கிய அமலாக்கத்துறை அதிகாரியை லஞ்ச ஒழிப்பு போலீசார் கைது செய்தனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் அமலாக்கத்துறை பெயரில் தொழிலதிபர்களை மிரட்டி பணம் பறிப்பதாக லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு தகவல் கிடைத்தது. திண்டுக்கல் - மதுரை தேசிய நெடுஞ்சாலையில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, சந்தேகத்துக்கு உரிய நபர் ஒருவர் வந்த வாகனத்தை நிறுத்தி சோதனையிட்டனர். அதில் ரூ.20 லட்சம் பணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக அவரிடம் விசாரணை நடந்தது.

அதில், பணத்தை கொண்டு வந்தது அமலாக்கத்துறையைச் சேர்ந்த அங்கித் திவாரி என்பதும், திண்டுக்கல்லை சேர்ந்த டாக்டர் ஒருவர் மீது அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளதும், அந்த வழக்கை முடித்து வைக்க டாக்டரிடம் இருந்து ரூ.20 லட்சம் லஞ்சத்தை பெற்றதும் தெரியவந்தது. இதனையடுத்து போலீசார் அவரை கைது செய்தனர்.

# என்னிடம் சொந்தமாக சைக்கிள்கூட இல்லை: விவசாயியிடம் பகிர்ந்த பிரதமர் மோடி

**புதுடெல்லி, டிச. 02-**

இப்போது வரை என்னிடம் சொந்தமாக சைக்கிள் கூட இல்லை என்று விவசாயியிடம் பகிர்ந்த பிரதமர் மோடி கூறியுள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் வரவுள்ள நிலையில் அனைத்து அரசு நிகழ்ச்சிகளும் தேர்தல் பிரசார மேடையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. விக்சித் பாரத் சங்கல்ப் யாத்ரா என்ற பெயரில் மத்திய அரசின் விவசாய கடன் அட்டை, கிராமப்புற வீட்டு வசதித் திட்டம், உஜ்வாலா திட்டம் போன்ற அரசு நலத்திட்டங்களையும், பயனாளிகள் அதனை நினைவுகூரும் வகையிலும் விளம்பர பிரசாரம் ஒன்றை நடத்தி வருகிறது.

இந்நிலையில், ஜம்மு காஷ்மீரில் மத்திய அரசு திட்ட பயனாளிகளுடன் பிரதமர் மோடி காணொலி காட்சி வழியாக சமீபத்தில் கலந்துரையாடினார். ரங்பூர் கிராம சர்பஞ்ச் பல்வீர் கவுர் என்பவருடன் பிரதமர் மோடி பேசினார். அப்போது விவசாய கடன் அட்டையைப் பயன்படுத்தி டிராக்டர் வாங்கியதைப் பற்றி சர்பஞ்ச் பல்வீர் கவுர் பெருமையுடன் கூறினார். அப்போது அவரிடம் பேசிய பிரதமர் மோடி, உங்களிடம் டிராக்டர் இருக்கிறது. என்னிடம் சொந்தமாக சைக்கிள்கூட இல்லை என தெரிவித்தார்.

### புயல் எச்சரிக்கையால், முதல்வர்

# ஸ்டாலினின் இன்றைய நிகழ்ச்சி ஒத்திவைப்பு

**சென்னை, டிச. 02-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று சனிக்கிழமை நடைபெற இருந்த உலக மாற்றுத்திறனாளிகள் தின விழாவானது புயல், கனமழை எச்சரிக்கை காரணத்தினால் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக மாற்றுத்திறனாளிகள் தினம், ஆண்டுதோறும் டிசம்பர் மூன்றாம் நாள் அனுசரிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு, டிசம்பர் இரண்டாம் தேதி காலை 10.30 மணியளவில், சென்னை கலைவாணர் அரங்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் உலக மாற்றுத்திறனாளிகள் தின விழா, விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கும் விழா. மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கும் விழா நடைபெற இருந்தது.


புயல், கனமழை எச்சரிக்கை காரணத்தினால் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

உலக மாற்றுத்திறனாளிகள் தினம், ஆண்டுதோறும் டிசம்பர் மூன்றாம் நாள் அனுசரிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு, டிசம்பர் இரண்டாம் தேதி காலை 10.30 மணியளவில், சென்னை கலைவாணர் அரங்கத்தில் முதல்வர் தலைமையில் உலக மாற்றுத்திறனாளிகள் தின விழா, விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கும் விழா, மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கும் விழா நடைபெற இருந்தது.

தற்போது, இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் இன்று 2-ம் தேதி முதல் 4-ம் தேதி வரை சென்னையில் புயல் மற்றும் கனமழை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன் காரணமாக, இன்று 2-ம் தேதி முதல்வர் தலைமையில் நடைபெற இருந்த உலக மாற்றுத்திறனாளிகள் தின விழா நிகழ்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது. இவ்விழா நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 8-க்கும் அதிகமான குழந்தைகளை ரஷ்ய பெண்கள் பெற்று கொள்ள வேண்டும்

### அதிபர் புடின் வலியுறுத்தல்



நினைவில் கொள்வோம்.

**மாஸ்கோ, டிச. 02-**

பிறப்பு விகிதம் குறைந்து வருவதால் ரஷ்ய பெண்கள் 8 அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அதிபர் புடின் வலியுறுத்தி உள்ளார்.

ரஷ்யாவில் பிறப்பு விகிதம் கடந்த 1990-ல் இருந்து குறைந்து வருகிறது. உக்ரைனுக்கு எதிராக சுமார் இரண்டு வருட போரில் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட ரஷியர்கள உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இதையெல்லாம் கணக்கில் கொண்டு ரஷ்ய பெண்கள் 8 அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டும். இதை நடைமுறையாக்க வேண்டும். அடுத்த 10 முதல் 20 வருடங்களில் ரஷ்யாவின் மக்கள் தொகையை உயர்த்துவதுதான் முக்கிய இலக்கு என்று அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.

நம்முடைய பல இனத்தினர் நான்கு, ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளுடன் வலுவான பல தலைமுறை குடும்பங்களை கொண்ட பாரம்பரியத்தை பாதுகாத்து வருகின்றனர். ரஷ்ய குடும்பங்களில் ஏராளமான நம்முடைய பாட்டிகள், பாட்டியின் அம்மாக்கள் ஏழு, எட்டு மற்றும் அதற்கும் மேற்பட்ட குழந்தைகளை கொண்டிருந்தனர் என்பது நினைவில் கொள்வோம்.

இந்த சிறந்த பாரம்பரியத்தை பாதுகாத்து புத்துயிர் பெறுவோம். பெரிய குடும்பங்கள் நடைமுறையாகவும், ரஷ்யாவின் அனைத்து மக்களுக்கும் ஒரு வாழ்க்கை முறையாகவும் வேண்டும். குடும்பம் என்பது அரசு மற்றும் சமூகத்தின் அடித்தளம் மட்டுமல்ல, அது ஒரு ஆன்மீக நிகழ்வு, ஒழுக்கத்தின் ஆதாரம்.

ரஷ்யாவின் மக்கள் தொகையைப் பாதுகாத்தல் மற்றும் அதிகரிப்பது வரவிருக்கும் தசாப்தங்களுக்கு மட்டுமல்ல. தலைமுறைகளுக்கும் கூட என்பதுதான் இலக்கு.

இவ்வாறு புடின் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் இன்று அரசு பள்ளிகளுக்கு விடுமுறை

**சென்னை, டிச. 02-**

இன்று அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் இன்று அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவித்து முதன்மை கல்வி அலுவலர் மார்ஸ் அறிக்கை வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில், அரசு பள்ளிகளைச் சார்ந்த ஆசிரியர்களுக்கு இன்றைய தினம் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் பயிற்சி வகுப்புகள் இருப்பதன் காரணமாக இன்று அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்சூர் அலிகான் மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டாம்: நடிகை திரிஷா

**சென்னை,டிச. 02-**

மன்சூர் அலிகான் மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கு அளித்த விளக்க கடிதத்தில் நடிகை திரிஷா தெரிவித்துள்ளார்.

நடிகர் மன்சூர் அலிகான் சமீபத்தில் நடிகை திரிஷா குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்திருந்தார். அந்த வீடியோ வலைதளங்களில் வேகமாக பரவியது. அவரது பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து நடிகை திரிஷா தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டார். திரிஷாவை தொடர்ந்து குஷ்பு உள்ளிட்ட பலரும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இதே போல மன்சூர் அலிகான் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் இல்லாவிட்டால் அவர் நடிகர் சங்கத்தில் இருந்து நீக்கப்படுவார் என தென்னிந்திய நடிகர் சங்கமும் எச்சரிக்கை விடுத்தது. இதற்கிடையே மன்சூர் அலிகான் மீது தாமாக முன்வந்து நடவடிக்கை எடுக்குமாறு போலீஸ் டி.ஜி.பி.க்கு தேசிய மகளிர் ஆணையம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை ஏற்று உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சென்னை போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோருக்கு, டி.ஜி.பி. சங்கர் ஜிவால் உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து மன்சூர் அலிகான் மீது சென்னை ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் 2 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர்.

மேலும் சர்ச்சை பேச்சு குறித்து விசாரணைக்கு நேரில் ஆஜராக கோரி மன்சூர் அலிகானுக்கு போலீசார் சம்மன் வழங்கினர். இந்த சம்மனை ஏற்று நடிகர் மன்சூர் அலிகான் ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு நேரில் வந்து விளக்கம் அளித்தார்.

இதனை தொடர்ந்து, மன்சூர் அலிகான் வெளியிட்ட ஒரு அறிக்கையில், திரிஷாவிடம் மன்னிப்பு கேட்டு இருந்தார். மன்சூர் அலிகானின் அறிக்கை வெளியாகி சில மணி நேரங்களில் நடிகை திரிஷா தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டார். அதில், தவறு செய்வது மனித இயல்பு, அதை மன்னிப்பது தெய்வத் தன்மை என குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், நடிகை திரிஷா குறித்து நடிகர் மன்சூர் அலிகான் சர்ச்சைக்குரிய வகையில் பேசிய விவகாரம் தொடர்பாக திரிஷா தரப்பிடம் விளக்கம் கேட்டு ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல்நிலைய போலீசார் கடிதம் அனுப்பினர். இந்த விவகாரம் தொடர்பாக எழுத்துப்பூர்வமாக விளக்கம் அளிக்க வேண்டும் என திரிஷாவுக்கு காவல்துறை அறிவுறுத்தியது.

இதையடுத்து போலீசாரின் கடிதத்திற்கு நடிகை திரிஷா பதிலளித்துள்ளார். அதில், நடிகர் மன்சூர் அலிகான் தனது பேச்சுக்கு மன்னிப்பு கேட்டு விட்டதால் அவர் மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டாம் என நடிகை திரிஷா தெரிவித்துள்ளார்.

### அமெரிக்காவில்

# இந்திய மாணவரை கொடுமை செய்ததாக 3 பேர் கைது

**வாஷிங்டன், டிச. 02-**

அமெரிக்காவுக்கு மேல் படிப்புக்காகச் சென்ற இந்திய இளைஞரை மாதக் கணக்காக வீட்டில் அடைத்து வைத்து வன்கொடுமை செய்து, வேலை செய்யவைத்த மூவரைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

அந்த மாணவர் பல மாதங்களாக மூன்று வீடுகளில் அடைத்து வைக்கப்பட்டு உணவு, கழிப்பிடம் எதுவும் அளிக்கப்படாமல் வன்கொடுமைகளுக்கு ஆளாகியுள்ளார்.

இந்த வழக்கில் அவரது உறவினர் ஒருவர் உள்பட மூன்று பேரைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். அந்தப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் ‘911’ அவசர எண்ணிற்கு அளித்த புகாரின் அடிப்படையில் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் 20 வயதான இந்திய மாணவரை வீட்டின் அடித்தளத்தில் பல மாதங்கள் அடைத்து வைத்து வேலை செய்ய வைத்தது தெரியவந்தது. இதனடிப்படையில் வெங்கடேஷ் ஆர் சத்தாரு, ஷ்ரவணா வர்மா, நிக்கில் வர்மா ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஆண்டு இந்தியாவிலிருந்து, ரோல்லாவில் உள்ள மிசோரி அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் மேல் படிப்புக்காக அமெரிக்கா சென்ற மாணவரை சத்தாரு, வீட்டில் அடைத்துவைத்து தனது ஐ.டி நிறுவனத்தின் வேலைகளைப் பார்க்க வைத்துள்ளார். வேலையை சரியாக முடிக்கவில்லை என்றால் மாணவனை நிர்வாணமாக்கி, இரும்புக் கம்பி மற்றும் பிவிசி பைப்புகளால் தாக்கியுள்ளார். அந்த மாணவர் ஒரு நாளில் கான்கிரீட் தரையில் மூன்று மணிநேரம் மட்டுமே தூங்க அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட மாணவரின் உடலில் எலும்பு முறிவுகள், பல ஆராத காயங்கள் இருப்பதாகவும் அவர் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருவதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் கடத்தல் மற்றும் வன்கொடுமைப் பிரிவிகளின் கீழ் வழக்கு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சந்தேகத்திற்குரியதான தகவல்களை உடனே தெரிவிக்குமாறு மக்களுக்கு காவல்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# மசோதாக்களை இழுத்தடிக்க கவர்னர் ஆர்.என். ரவி முயற்சி

### அமைச்சர் ரகுபதி குற்றச்சாட்டு

**சென்னை, டிச. 02-**

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை கவர்னர் இழுத்தடிக்க முயற்சிக்கிறார் என்று அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

சென்னை லயோலா கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற சட்டத்துறை அமைச்சர் ரகுபதி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது செயதியாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கு அவர் பதில் அளித்தார். அதன் விவரம் வருமாறு:-

கேள்வி:- சட்டமன்றத்தில் 2-வது முறையாக நிறைவேற்றப்பட்ட 10 சட்ட மசோதாக்களுக்கு கவர்னர் ஆர். என்.ரவி ஒப்புதல் அளித்து விட்டாரா?

பதில்:- அந்த 10 சட்ட மசோதாக்களை நாங்கள் சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பினோம். அதை திருப்பி அனுப்புவதற்கு முன்பு கவர்னர் இன்னென்ன காரணங்களுக்காக நான் திருப்பி அனுப்புகிறேன் என்று குறிப்பிட்டு இருப்பாரேயானால், அதற்கான தகுந்த விளக்கங்களை நாங்கள் தந்து, அந்த மசோதாக்களை நிறைவேற்றி திருப்பி அனுப்பி இருப்போம்.

ஆனால் அப்போது காரணம் தெரிவிக்காமல் சும்மா அனுப்பி விட்டு இப்போது நாங்கள் மீண்டும் சட்டமன்றத்தில் 10 மசோதாக்களை நிறைவேற்றி அனுப்பியவுடன், தான் ஒப்புதல் தர வேண்டும் என்கின்ற கட்டாயத்திற்கு ஆளாகி இருக்கின்ற நிலையிலே, அதற்கு ஒப்புதல் தராமல் இழுத்தடிப்பதற்காக இன்றைக்கு உள்துறை அமைச்சகத்தின் மூலமாக ஜனாதிபதிக்கு அனுப்பி இருப்பதாக ஒரு செய்தியை சொல்லி இருக்கிறார்.

கேள்வி:- இந்த விசயத்தில் அவர் தொடர்ந்து கால தாமதப்படுத்தும் நடவடிக்கையாக பார்க்கிறீர்களா?

பதில்:- தன்னிடம் இருக்கக் கூடிய அதிகாரம் பறி போகக் கூடாது என்ற எண்ணம் ஏன் அவருக்கு வருகிறது என்று தெரியவில்லை. ஒரு மாநில அரசுக்கு ஒரு துணை வேந்தரை நியமிக்க கூட அதிகாரம் கூடாது என்று நினைப்பது எந்த அடிப்படையில் நியாயமான ஒன்று என்று புரியவில்லை.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர் ஒரு குழுவை நியமிக்கிறோம். அந்த குழுவில் கவர்னரின் பிரதிநிதியும் இருக்கிறார்.

அரசின் பிரதிநிதியும் இருக்கிறார். சிண்டி கேட் பிரதிநிதியும் அதில் உள்ளார். அந்த தேடுதல் குழுதான் மூன்று பேரையும் பரிந்துரை செய்கிறது. அதில் ஒருவரை துணைவேந்தராக தேர்ந்தெடுக்க வேண்டும்.

கவர்னர் தேர்ந்தெடுப்பதற்கு பதிலாக மாநில அரசாங்கம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்வதிலே என்ன தவறு இருக்கிறது? மக்கள் உரிமை பறிக்கப்படாமல் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக நாங்கள் இந்த மசோதாக்களை அவருக்கு 2-வது முறையாக அனுப்பி இருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# தீவுத்திடல் அருகே தனியார் நடத்தும் கார் பந்தயத்துக்கு ஏன் இவ்வளவு நிதி?

### தமிழக அரசுக்கு ஐகோர்ட் கேள்வி

**சென்னை, டிச. 02-**

சென்னை தீவுத்திடல் அருகே தனியார் நடத்தும் கார் பந்தயத்துக்கு தமிழக அரசு ஏன் இவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறது என்று சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியிருக்கிறது.

சென்னையில் வரும் டிசம்பர் 9 மற்றும் 10ஆம் தேதிகளில், தீவுத்திடல் மைதானத்தை சுற்றியுள்ள 3.5 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்ட சாலைகளில் இரவுப் போட்டியாக பார்முலா 4 கார் பந்தயம் நடைபெறவிருக்கிறது. இதற்காக தமிழக அரசு சார்பில் ரூ.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்து மருத்துவர் ஸ்ரீஹரீஸ் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நலன் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்த போது, ஃபார்முலா கார் பந்தயம் தொடர்பாக தனியார் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் குறித்து அனைத்து விவரங்களையும் டிசம்பர் 4ஆம் தேதி தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையின் போது, கார் பந்தயம் நடத்தவிருக்கும் தனியார் நிறுவனம் சார்பில் வைக்கப்பட்ட வாதங்களில், கார் பந்தயம் நடத்தும் இடத்தில், தடுப்பாண்கள், கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.200 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

பந்தய வீரர்கள் மட்டுமல்லாமல் பார்வையாளர்களுக்கும் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஃபார்முலா பந்தய தடம் அமைக்கும் பணிகளுக்காக ஒரு மரம் கூட வெட்டப்படவில்லை என்று தமிழக அரசு வாதத்தை முன் வைத்தது. ஃபார்முலா கார் பந்தயத்தால், அப்பகுதியில் ராணுவம், கடற்படை, துறைமுக நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதாக உள்ளது என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, தனியார் நடத்தும் கார் பந்தயத்துக்காக, தமிழக அரசு ஏன் இவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறது என்றும், இதன் மூலம் தமிழக அரசுக்கு ஏதேனும் வருவாய் கிடைக்குமா என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

பந்தயத்தை நடத்துவது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாகவும், ஏற்கனவே ஐதராபாத்தில் பாதுகாப்பு அம்சங்களுடன் பந்தயத்தை நடத்தியுள்ளதாகவும் நிறுவனங்கள் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இதனை பதிவு செய்த நீதிமன்றம், கார் பந்தய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வரும் திங்கட்கிழமை தாக்கல் செய்ய தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

### ரூ.1000 கோடியில் அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள்

# மேம்பாட்டுத் திட்டம் 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட உள்ளது: முதல்வர்

**சென்னை, டிச. 02-**

ஆதி திராவிடர் குடியிருப்புகளை மேம்படுத்த அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் வரும் ஐந்தாண்டுகளில் 1000 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள அயோத்திதாச பண்டிதரின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது,

தமிழக அரசியலில் தமிழன், திராவிடன் ஆகிய இரண்டு சொற்களையும் அடையாளச் சொல்லாக மாற்றியவர் அயோத்திதாசப் பண்டிதர். தமிழ் அல்லது திராவிடம் என்பது மொழி மட்டுமல்ல, அதை ஒரு பண்பாட்டு நடைமுறையாக பார்த்தவர் அயோத்திதாசர்.

எழுத்தாளர், ஆய்வாளர், வரலாற்று ஆசிரியர்,மானுடவியல் சிந்தனையாளர்,பதிப்பாளர், பத்திரிகையாளர், மருத்துவர், பேச்சாளர், மொழியியல் வல்லுநர், பன்மொழிப் புலவர் என்று பன்முக ஆற்றல் கொண்டவராக செயல்பட்ட அயோத்திதாசர், தான் வாழ்ந்த காலம் முழுவதும் அறிவொளி பரப்பியவர். அவர் அமைத்துக் கொடுத்த அறிவுத் தளத்தில்தான் 150 ஆண்டுகால தமிழர் அறிவியக்கம் செயல்பட்டு வருகிறது.

இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு சாதியும் மதமுமே தடை என்று கூறிய அயோத்திதாசர், மனிதர்களை, மனிதர்களாக பார்க்கும் எவரோ, அவர்தான் மனிதர் என்று முழங்கினார். அவருடைய நூல்கள் இன்றைக்கும் அறிவொளி ஊட்டுவதாக இருக்கிறது.

1845 முதல் 1914 வரை வாழ்ந்த அயோத்திதாசர் அவர்களுடைய 175-வது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவருடைய அறிவை வணங்குகின்ற விதமாகவும் இந்த மணிமண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆதி திராவிடர் குடியிருப்புகளை மேம்படுத்த அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் வரும் ஐந்தாண்டுகளில் 1000 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது என்ற அறிவிப்பையும் நம்முடைய திராவிட மாடல் அரசு செய்திருக்கிறது.

மகான் புத்தரை இரவு பகலற்ற ஒளி என்று சொன்ன அயோத்திதாசப் பண்டிதருடைய சிந்தனைகளும், இரவு பகலற்ற ஒளியாக இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்படவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிலையில் அயோத்திதாசப் பண்டிதரின் மணி மண்டபத்தை திறந்து வைத்ததையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில்,

அயோத்திதாசரின் நூல்கள் நாட்டுடைமை. ரூ.10 லட்சம் பரிவுத்தொகை வழங்கல். அயோத்திதாசர் அஞ்சல் தலை வெளியீடு. அவர் நடத்திய தமிழன் இதழுக்கு நூற்றாண்டு விழா. அவர் பெயரிலான சித்த மருத்துவ ஆராய்ச்சி மையத்துக்கு நிலம் ஆகியவற்றை நிறைவேற்றியது தி.மு.க ஆட்சியே.

ஆதி திராவிடர் குடியிருப்புகளை மேம்படுத்த அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் வரும் ஐந்தாண்டுகளில் 1000 கோடி ரூபாய் செலவில் நமது திராவிட மாடல் அரசால் செயல்படுத்தப்பட உள்ளது.

புத்தரை இரவு பகலற்ற ஒளி எனப் போற்றிய பண்டிதரின் சிந்தனைகளும் அத்தகைய ஒளியாகத் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்படட்டும் என்று அதில் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் ரூ.10-க்கு ஆவின் பால் பாக்கெட் விநியோகம்




**சென்னை, டிச. 02-**

சென்னையில் ரூ.10-க்கு ஆவின் பால் பாக்கெட் நேற்று முதல் விநியோகப்பட்டது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:- சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நாளொன்றுக்கு சுமார் 14.50 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல் நாளொன்றுக்கு சுமார் ரூ.1 கோடி மதிப்புள்ள பால் உபபொருட்களும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பொதுமக்களின் பால் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இருமுறை சமன்படுத்தப்பட்ட பால் (மெஜெந்தா நிறம்), சமன்படுத்தப்பட்ட பால் (நீல நிறம்), நிலைப்படுத்தப்பட்ட பால் (பச்சை நிறம்) மற்றும் நிறை கொழுப்பு பால் (ஆரஞ்சு நிறம்) விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்தநிலையில் பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கு ஏற்ற வகையிலும் அனைத்து வயதினரும் பருகும் வகையிலும் கடந்த மே 9-ம் தேதி சென்னையில் வைட்டமின் ஏ மற்றும் டி செறிவூட்டப்பட்ட 500 மி.லி. ஆவின் டிலைட் பால் (ஊதா நிற பால் பாக்கெட்) அறிமுகம் செய்யப்பட்டு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

இதனைத்தொடர்ந்து தற்போது ஆவின் 500 மி.லி. டிலைட் பால் ரூ.21 விலையில் மாதாந்திர பால் அட்டைகள் வருகிற டிசம்பர் மாதம் முதல் அனைத்து வட்டார அலுவலகங்கள், ஆவின் பாலகங்கள் மற்றும் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களில் விற்பனை செய்யப்படும். மேலும் பொது மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப ரூ.10-க்கு 200 மி.லி. ஆவின் டிலைட் பால், 1-ம் தேதி (நேற்று) முதல் அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டதாக கூறப்பட்டு உள்ளது.

# துபாய் சென்றடைந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு



**துபாய், டிச. 02-**

காலநிலை மாற்ற உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக துபாய் சென்ற பிரதமர் மோடிக்கு அங்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

உலக காலநிலை மாற்ற உச்சி மாநாடு ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி நேற்று முன்தினம் மாலை டெல்லியில் இருந்து துபாய் புறப்பட்டார். நேற்று முன்தினம் இரவு அவர் துபாய் சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் அந்நாட்டின் துணை பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோர் பிரதமர் மோடியை வரவேற்றனர். விமான நிலையத்தில் இருந்து ஓட்டலுக்கு செல்லும் வழியிலும், ஓட்டலுக்கு வெளியேயும், பிரதமர் மோடிக்கு ஐக்கிய எமிரேட்ஸ் வாழும் இந்தியர்கள் அமோக வரவேற்பு அளித்தனர்.

இந்திய தேசியக் கொடிகளை கையில் ஏந்தியும் வரவேற்பு அளித்தனர். பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலாசார நிகழ்ச்சியை பிரதமர் மோடி கண்டுகளித்தார்.

உலக காலநிலை மாற்ற உச்சி மாநாட்டில் இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் உள்ளிட்ட பலரும் பங்கேற்கிறார்கள். இதுதொடர்பாக வெளியுறவுத்துறை செயலாளர் வினய் குவாத்ரா கூறுகையில்,

பிரதமர் மோடி உச்சி மாநாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்கிறார். உலக காலநிலை மாற்ற உச்சி மாநாட்டின் தொடக்க அமர்வில் பிரதமர் தனது உரையை ஆற்றுவார். உரையைத் தவிர பிரதமர் 3 உயர்மட்ட நிகழ்வுகளில் பங்கேற்கிறார்.

அதில் இரு நிகழ்ச்சிகள் இந்தியாவால் இணைந்து நடத்தப்படுகிறது. இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் இணைந்து நடத்தும் முதல் உயர்மட்ட நிகழ்வு பசுமைமயமாக்கத்தின் தொடக்கமாகும் என தெரிவித்தார்.

# திருப்பதியில் சந்திரபாபு நாயுடு சாமி தரிசனம்

### ஏழுமலையான் காப்பாற்றுவார் என பேட்டி

**திருப்பதி, டிச. 02-**

திருப்பதி கோவிலில் ஆந்திர முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு சாமி தரிசனம் செய்தார். அப்போது அவர், தன்னை ஏழுமலையான் காப்பாற்றுவார் என தெரிவித்தார்.

ஆந்திர முன்னாள் முதல்வரும், தெலுங்கு தேசம் கட்சி தலைவருமான சந்திரபாபு நாயுடு திறன் மேம்பாட்டு ஊழல் வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார். பின்னர் அவர் ஜாமீனில் வெளியே வந்தார். இந்த நிலையில் சந்திரபாபு நாயுடு நேற்று முன்தினம் தனது மனைவி புவனேஸ்வரியுடன் திருப்பதிக்கு சென்றார். அவருக்கு தெலுங்கு தேசம் கட்சி தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் திரண்டு வந்து உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் திருப்பதி மலைக்கு சென்ற சந்திரபாபு நாயுடு அங்குள்ள விருந்தினர் மாளிகையில் இரவு தங்கினார். நேற்று காலை வி.ஐ.பி. பிரேக் தரிசனத்தில் வைகுண்ட வாசல் வழியாக ஏழுமலையானை தரிசனம் செய்தார்.

தரிசனம் முடிந்து வெளியே வந்த சந்திரபாபு நாயுடு பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இந்தியாவை உலகின் நம்பர் ஒன் ஆக்குவதும், தெலுங்கு மக்களை முதலிடம் பிடிக்க வைப்பதுமே எனது முதன்மையான நோக்கம். எப்போதுமே அதுதான் என் கனவாக இருந்து வருகிறது. எனது 45 வருட அரசியல் வாழ்க்கையில் அதற்காகத்தான் வேலை செய்திருக்கிறேன்.

மற்ற நாடுகளின் முன்னேற்றங்களைப் பார்த்து அவதானிப்பதும், அவர்களின் தொழில்நுட்பங்களை மாநில மக்களின் நன்மைக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் பயன்படுத்துவதே எனது ஆர்வமாக இருந்து வந்திருக்கிறது என்றார்.

இன்னும் சில கோயில்களுக்கு செல்ல திட்டமிட்டுள்ளேன். பகவான் வெங்கடேஷ்வரர் எங்களின் குல தெய்வம். அதனால்தான் நான் இந்த மலைக்கோயிலுக்கு செல்வதற்கு முன்னுரிமை அளித்தேன். என் வாழ்க்கையில் எந்த ஒரு முக்கியமான விஷயங்கள் நடந்தாலும் வெங்கடேஷ்வரனின் ஆசிர்வாதத்தை பெறுவது எனது வழக்கம்.

நான் இந்த மலைக்கோயில் அடிவாரத்தில் உள்ள கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். நான் அலிபிரி குண்டு வெடிப்பில் உயிர் பிழைத்ததே இந்த வெங்கடேஷ்வரனின் ஆசிர்வாதம் தான்.

ஏழுமலையான் என்னை காப்பாற்றுவார். தற்போது என் வாழ்வில் ஏற்பட்ட சிக்கல்களையும், கஷ்டங்களையும் அவரின் ஆசிர்வாதத்தால் நான் கடந்து வந்தேன். இந்த இக்கட்டான நேரத்தில் என்மீது நம்பிக்கை வைத்த மாநில மக்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

# வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூ. 26.50 உயர்வு

**சென்னை, டிச. 02-**

சென்னையில் வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூ. 26.50 உயர்ந்துள்ளது.

சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் அவ்வபோது மாற்றியமைத்து வருகின்றன. அந்த வகையில் மாதத்தின் முதல்நாளான நேற்று வணிகப் பயன்பாட்டுக்கான 19 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தியுள்ளன.

அதன்படி, சென்னையில் ரூ. 1,942-க்கு விற்கப்பட்ட சிலிண்டர், ரூ. 26.50 உயர்ந்து ரூ. 1,968.50-க்கு விற்பனை செய்யப்படுகிறது. நேற்று நள்ளிரவு முதல் இது அமலுக்கு வந்துள்ளது. டெல்லியில் ரூ. 1,796.50-க்கும் மும்பையில் ரூ. 1,749-க்கும் கொல்கத்தாவில் ரூ. 1,908-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வணிக சிலிண்டர் விலை கடந்த அக்டோபரில் உயர்த்தப்பட்ட நிலையில் நவம்பரில் குறைக்கப்பட்டது. இதையடுத்து டிசம்பரில் மீண்டும் உயர்ந்துள்ளது. வீட்டு உபயோக சிலிண்டர் விலை எந்த மாற்றமுமின்றி ரூ. 918.50-க்கு விற்பனையாகிறது.

### 'பீஸ்ட்' திரைப்படத்தில் நடித்த

# பழம்பெரும் நடிகை சுப்புலட்சுமி காலமானார்

**திருவனந்தபுரம், டிச. 02-**

நடிகர் விஜய்யின் பீஸ்ட் திரைப்படத்தில் நடித்த பழம்பெரும் நடிகை சுப்புலட்சுமி காலமானார். அவருக்கு திரையுலகை சேர்ந்த பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

கேரளாவைச் சேர்ந்த பழம்பெரும் நடிகையும் இசை கலைஞருமான ஆர். சுப்புலட்சுமி காலமானார். கடந்த சில நாட்களாக உடல் நலம் பாதிக்கப்பட்டு திருவனந்தபுரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு காலமானார். அவருக்கு வயது 87. அவரது மறைவு குறித்த தகவலை அவரது பேத்தி சவுபாக்யா தனது இன்ஸ்டாகிராமில் தெரிவித்துள்ளார்.

இவர் ஆர். சுப்புலட்சுமியின் மகளும், நடிகையுமான தாரா கல்யாணின் மகள் ஆவார்.

கேரளாவில் 21 ஏப்ரல் 1936-ம் ஆண்டு பிறந்த ஆர். சுப்புலட்சுமி, திருவனந்தபுரத்தில் உள்ள ஜவஹர் பால பவனில் இசை கலைஞராகவும் நடனப் பயிற்சியாளராகவும் பணியாற்றினார். பின்னர் 1951-ம் ஆண்டு முதல் அகில இந்திய வானொலியில் பணிபுரிந்தார். அகில இந்திய வானொலியில் பணியாற்றிய தென்னிந்தியாவைச் சேர்ந்த முதல் பெண் இசைக்கலைஞர் என்ற சாதனையையும் படைத்தார்.

டப்பிங் துறையிலும் தனது திறமையை வெளிப்படுத்தினார். தனது 66-வது வயதில் முதன்முறையாக பிருத்விராஜ் நடித்த நந்தனம் திரைப்படத்தின் மூலம் ஆர். சுப்புலட்சுமி திரைத்துறையில் நுழைந்தார். அதன்பிறகு, கல்யாணராமன், ராப்பகல், திலகம், சி.ஐ.டி மூசா, பாண்டிப்படா உள்ளிட்ட மலையாள திரைப்படங்கள் மூலம் பிரபலமடைந்தார். மலையாளத்தில் 50-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள அவர், தமிழ், இந்தி, தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிப்படங்களில் நடித்துள்ளார்.

தமிழில் விஜய்யின் பீஸ்ட் திரைப்படம், விண்ணை தாண்டி வருவாயா, ராமன் தேடிய சீதை, அம்மனி உள்ளிட்ட படங்களில் ஆர்.சுப்புலட்சுமி கவனம் பெற்றிருந்தார். பீஸ்ட் படத்தில் பணயக் கைதியாக நடித்திருந்தார். ஆர்.சுப்புலட்சுமியின் மறைவுக்கு திரையுலகினர் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# பெங்களூரில் ஒரே நேரத்தில் 15 பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்: பெற்றோர்கள் அதிர்ச்சி

**பெங்களூரு, டிச. 02-**

பெங்களூரில் உள்ள 15 பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மர்ம நபர் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

பெங்களூருவில் உள்ள 15 பள்ளிகளுக்கு பள்ளி வளாகத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக மிரட்டல் மின்னஞ்சல் கடிதம் நேற்று அதிகாலையில் வந்தது. இதை பார்த்து பள்ளி ஆசிரியர்கள் கடும் அதிர்ச்சியும், பீதியும் அடைந்தனர்.

முன்எச்சரிக்கையாக பள்ளி ஊழியர்கள் அனைவரும் பள்ளியை விட்டு வெளியேறி போலீசாருக்கு உடனடியாக இது பற்றி தகவல் தெரிவித்தனர். இந்த தகவல் பள்ளியை சுற்றிலும் உள்ள பகுதிகளில் காட்டுத்தீப்போல் பரவியது. இதனால் பள்ளி குழந்தைகளின் பெற்றோர் மற்றும் பொதுமக்கள் பள்ளி நுழைவு வாயில் முன்பு குவிந்தனர். மேலும் அங்கு பதட்டத்துடன் நின்று கொண்டிருந்தனர்.

இதனிடையே போலீசார் விரைந்து சென்று அனைத்து பள்ளிகளிலும் வெடிகுண்டு நிபுணர்களுடன் சோதனையில் ஈடுபட்டனர். மேலும் மோப்பநாய் உதவியுடன் வெடிகுண்டு இருக்கிறதா? என பள்ளி வகுப்பறைகள் மற்றும் கழிப்பிடம், சமையல் அறை, பள்ளி விடுதி மற்றும் பள்ளி வளாகம் முழுவதும் சோதனை செய்தனர்.

காலையில் தொடங்கிய இந்த சோதனை வெகுநேரம் நடைபெற்றது. ஆனால் வெடிகுண்டு எதுவும் சிக்கவில்லை. இதனால் போலீசார், பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள், பெற்றோர்கள் நிம்மதி அடைத்தனர். மின்னஞ்சல் அனுப்பி மர்மநபர் புரளியை கிளப்பி இருப்பது தெரியவந்தது.

இந்த மின்னஞ்சல் முகவரி மற்றும் ஐ.டி.யை கம்ப்யூட்டரில் இருந்து கைப்பற்றி வெடிகுண்டு மிரட்டல் விடுத்து மின்னஞ்சல் அனுப்பியது யார்? என போலீசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஆண்டும் இதே போல் பெங்களூரில் உள்ள பல பள்ளிகளுக்கு மின்னஞ்சல் மிரட்டல்கள் வந்தன, ஆனால் அவை அனைத்தும் புரளி என்பது குறிப்படத்தக்கது.

இந்நிலையில், செய்தியாளர்களை சந்தித்த துணை முதல்வர் டி.கே.சிவகுமார் கூறுகையில், சம்பவம் குறித்து அறிந்ததும் அதிர்ச்சி அடைந்தேன். பள்ளிக்கூடம் ஒன்று எனது வீட்டிற்கு எதிரே உள்ளது, இதை ஆய்வுசெய்ய இங்கு வந்தேன். இது சில மர்ம நபர்களின் போலி அழைப்பு போல் தெரிகிறது. இதுகுறித்து விசாரணை நடத்தி வருவதாக போலீசார் தெரிவித்தனர் என்று கூறினார்.

# தமிழகத்தில் 2000 இடங்களில் இன்று சிறப்பு மருத்துவ முகாம்

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

**சென்னை, டிச. 02-**

தமிழகம் முழுவதும் இன்று மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் 2000 இடங்களில் நடைபெறும், அதில் 100 முகாம் பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெறும் என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே மக்கள் நல்வாழ்வுத்துறையும், உள்ளாட்சி அமைப்புகளும் ஒருங்கிணைந்து மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் கடந்த 23.10.2023 தொடங்கி தற்போது வரை வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும் முகாம் 1000 என்று அறிவிக்கப்பட்டு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடைபெறுகிறது.

அந்த வகையில் கடந்த 5 வாரங்களில் இதுவரை 10,576 முகாம்கள் நடைபெற்று, அதில் 5,21,853 பேர் பங்கேற்று பயன் பெற்றுள்ளனர். மழைப்பொழிவு அதிகமாக உள்ள காரணத்தினால் முதல்வரின் உத்திரவின்படி இன்று மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் 2000 இடங்களில் காலை 09.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை நடைபெறும்.

பொதுமக்கள் அனைவரும் பங்கேற்று பரிசோதனை மேற்கொண்டு மழைக்கால நோய்களிடமிருந்து தங்களை தற்காத்து கொள்ள வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

# அடுக்குமாடி குடியிருப்பு திட்ட பதிவு கட்டண குறைப்பு அமலுக்கு வந்தது

**சென்னை, டிச. 02-**

அடுக்குமாடி குடியிருப்பு திட்டங்களில், வீடு விற்பனைக்கான முத்திரை தீர்வை, பதிவு கட்டணம் குறைப்பு நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

தமிழகத்தில் அடுக்குமாடி குடியிருப்பு திட்டங்களில், வீடு விற்பனையின் போது, நிலத்தின் பிரிபடாத பங்கான, யு.டி.எஸ். அளவையும், மதிப்பையும் குறிப்பிட்டு, கிரைய பத்திரம் பதிவு செய்யப்படும். இதற்கு, முத்திரைத்தீர்வை 7 சதவீதம், பதிவு கட்டணம் 2 சதவீதம் வசூலிக்கப்படும்.

அதன் தொடர்ச்சியாக, கட்டுமான ஒப்பந்தம் தனியாக பதிவு செய்யப்படும். இரு வகையான பத்திரங்கள் பதிவு செய்யும் நடைமுறை மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, நிலத்தின் பிரிபடாத பங்கு, கட்டடத்தின் அளவு, மதிப்பு குறிப்பிடப்பட்டு, ஒரே பத்திரம் பதிவு செய்யும் புதிய நடைமுறை, நேற்று (டிச.1-ல்) அமலுக்கு வந்துள்ளது. இதன்படி பதிவாகும் பத்திரங்களுக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. 50 லட்சம் ரூபாய் வரையிலான வீடுகளின் பத்திரங்களுக்கு, 4 சதவீதம் முத்திரை தீர்வை, 2 சதவீதம் பதிவு கட்டணம் செலுத்தினால் போதும். இதே போன்று, 3 கோடி ரூபாய் வரை மதிப்புள்ள வீடுகளின் பத்திரங்களுக்கு, 5 சதவீதம் முத்திரை தீர்வை, 2 சதவீதம் பதிவு கட்டணம் வசூலிக்கப்படும் என்றும், நேற்று முதல் இது அமலுக்கு வந்துள்ளது என்றும் பதிவுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நவம்பரில் மெட்ரோ ரயிலில் 80 லட்சம் பேர் பயணம்

**சென்னை, டிச. 02-**

மெட்ரோ ரயில்களில் நவம்பர் மாதத்தில் மட்டும் 80 லட்சம் பேர் பயணித்துள்ளதாக மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. சென்னை மெட்ரோ ரயில்களில் நடப்பு ஆண்டு செப்டம்பரில் 84,37,182 பயணிகள் பயணித்த நிலையில், அக்டோபரில் இதை விட 1.13 லட்சம் பயணிகள் அதிகமாக 85,50,030 பேர் பயணித்து இருந்தனர்.

இந்நிலையில் நவம்பர் மாதத்தில் மட்டும் 80 லட்சம் பேர் பயணித்துள்ளனர். அதிகபட்சமாக நவம்பர் 10-ம் தேதி 3.35 லட்சம் பயணிகள் மெட்ரோ ரயில்களில் பயணித்துள்ளனர். சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கியூ ஆர் குறியீடு, பயண அட்டைகள், மற்றும் இணையவழி பயணச்சீட்டுகளுக்கு 20 சதவீதம் கட்டணத் தள்ளுபடி வழங்குகிறது.

மேலும் 83000 - 86000 என்ற எண்ணை பயன்படுத்து வாட்ஸ் - அப் மூலம் அல்லது இணைய பணப்பரிமாற்று செயலிகள் மூலம் பயணச்சீட்டுகள் முன்பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விசாரணை கைதிகளின் பற்கள் பிடுங்கிய வழக்கு:

# பதில் மனு தாக்கல் செய்ய அரசுக்கு ஐகோர்ட் மதுரை கிளை அறிவுறுத்தல்

**மதுரை, டிச. 02-**

விசாரணை கைதிகளின் பற்கள் பிடுங்கிய வழக்கில் பதில் மனு தாக்கல் செய்ய தாமதம் ஏன்? என்று தமிழக அரசுக்கு கேள்வி எழுப்பிய ஐகோர்ட் கிளை உடனே தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளது.

நெல்லை மாவட்டம் அம்பை போலீஸ் சரகத்தில் அம்பை, கல்லிடைக்குறிச்சி, வி.கே.புரம், பாப்பாக்குடி, அம்பை மகளிர் உள்ளிட்ட போலீஸ் நிலையங்கள் உள்ளன. இந்த சரகத்திற்குட்பட்ட பகுதிகளில் விசாரணைக்கு அழைத்து சென்றவர்களை அப்போதைய உதவி போலீஸ் சூப்பிரண்டு பல்வீர்சிங் பற்களை பிடுங்கி சித்ரவதை செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக போலீசார் வழக்குகள் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் விசாரணை கைதிகளின் பற்கள் பிடுங்கப்பட்ட விவகாரத்தில் பாதிக்கப்பட்ட அருண்குமார் என்பவர் உயர்நீதி மன்ற மதுரைக்கிளையில் தொடர்ந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், அரசுத்தரப்பு தாமதிக்காமல் உடனே பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். பதில் மனு தாக்கல் செய்யாவிட்டால் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் என்று கூறிய நீதிபதி, வழக்கு விசாரணையை வரும் 15ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

# ஆருத்ரா நிதி நிறுவன மோசடி வழக்கு: முக்கிய குற்றவாளி துபாயில் கைது

**சென்னை, டிச. 02-**

ஆருத்ரா நிதி நிறுவன மோசடி வழக்கில் முக்கிய குற்றவாளி ராஜசேகர் துபாயில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை அமைந்தகரையை மையமாக கொண்டு செயல்பட்டு வந்த ஆருத்ரா நிதி நிறுவனம் பொதுமக்களிடம் இருந்து அதிக அளவில் பணத்தை பெற்று மோசடியில் ஈடுபட்டது தெரிய வந்தது.

அதிக வட்டி தருவதாக ஆசை காட்டி ஏராளமானோரிடம் கோடிக்கணக்கில் வசூலித்த நிதி நிறுவன உரிமையாளர்கள் தலைமறைவாகிவிட்டனர்.

இது தொடர்பாக பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து மோசடியின் பின்னணி குறித்து தீவிரமாக விசாரித்து வருகிறார்கள்.

இந்த மோசடியில் தொடர்புடைய ஆருத்ரா அதிபர் ராஜசேகர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றிருந்தார். துபாயில் பதுங்கி இருக்கும் அவரை பிடிக்க போலீஸ் வியூகம் வகுத்திருந்தது. கடந்த 3 வருடமாக தேடப்பட்டு வந்த நிலையில் முக்கிய குற்றவாளியான ராஜசேகர் துபாயில் நேற்று கைது செய்யப்பட்டு உள்ளார்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



மத்திய பா.ஜ.க. அரசு, தன்னை எதிர்ப்பவர்கள் மீது அமலாக்கத்துறை, வருமான வரித்துறை மற்றும் சி.பி.ஐ. ஆகிய மூன்றையும் பயன்படுத்துகிறது. இதை வைத்து தி.மு.க.வையும் மிரட்டி பார்க்கலாம் என நினைக்கிறது. நடைபெற்று முடிந்திருக்கிற 5 மாநில தேர்தல் முடிவுகள் 'இன்டியா' கூட்டணிக்கே சாதகமாக இருக்கும்.

- கனிமொழி



வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் மிகவும் மாறுபட்டவை. இதைப் பற்றி எங்களால் எதுவும் கூற முடியாது. ம.பி.யில் காங்கிரஸ் 130 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மை பெறும். சிவராஜ் சிங் சௌகான் மற்றும் அவரது போலி வாக்குறுதிகளால் மக்கள் சலிப்படைந்துவிட்டனர். எனவே, மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள்.

- திக்விஜய் சிங்



5 மாநில தேர்தல் குறித்து எல்லா கருத்து கணிப்பு முடிவுகளும் பா.ஜ.க.விற்கு சாதகமாக இல்லை. சில மாநிலங்கள் சாதகமாக இருக்கின்றது. சில மாநிலங்களில் சாதகமற்ற நிலை இருக்கின்றது. இன்டியா கூட்டணி பார்லி., தேர்தலில் வெற்றி பெறும். இன்டியா கூட்டணி தேர்தலில் வெற்றி பெற்ற பின், பிரதமர் யார் என்பதை முடிவு செய்வோம்.

- சீதாராம் யெச்சூரி



தி.மு.க., ஆட்சியில் மணல் விற்பனையில், ஊழல் செய்துள்ளதாக, அமலாக்கத்துறை நீதிமன்றத்தில் கூறியுள்ளதாக, அண்ணாமலை சொல்கிறார். ஆனால், அரசியல் உள்நோக்கத்துடன் அமலாக்கத்துறை செயல்படுவதால்தான் மணல் குவாரி குறித்து, ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளிடம் விசாரிக்க, சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது.

- கே.எஸ். அழகிரி

# இராமநாதபுரத்தில் இருந்து சபரிமலைக்கு சிறப்பு ரயில் இயக்க தர்மர் எம்பி கோரிக்கை



**பரமக்குடி டிச 02**

இ ரா ம நா த பு ரத் தில் இருந்து சபரிமலைக்கு சிறப்பு ரயில் இயக்க வேண்டும் என வலியுறுத்தி மத்திய ரயில்வே துறை முதன்மை இயக்குநர் தேவேந்திரகுமாரிடம் தர்மர் எம்பி கோரிக்கை மனு அளித்தார்.

கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோவில் இந்தியாவின் பிரசித்தி பெற்ற புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. ஆண்டுதோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் இந்த கோவிலுக்கு வருடாந்திர யாத்திரையாக சென்று வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் தமிழ்நாட்டில் இருந்து மாலை அணிவித்து ஒரு மண்டலம் விரதம் இருந்து சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு சென்று வருகின்றனர். குறிப்பாக தமிழ்நாட்டில் இருந்து செல்லும் ஐயப்ப பக்தர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. ஆகவே அதை கருத்தில் கொண்டு இராமநாதபுரம் அல்லது மண்டபத்தில் இருந்து ஆண்டுதோறும் சபரிமலை கோவிலுக்கு பக்தர்கள் தரிசனம் செய்ய சிறப்பு ரயில்களை இயக்க வேண்டும். மத்திய அரசு நாடு முழுவதும் உள்ள மத வழிபாட்டு ஸ்தலங்களை நல்ல கட்டமைப்புடன் இணைக்கும் தொலைநோக்கு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக டில்லி- கத்ரா விரைவுச்சாலை 2000 கி. மீட்டருக்கு மேல் பயணிக்கும் வரலாற்று சிறப்புமிக்க காமக்யா - கத்ரா ரயில் மற்றும் இரண்டு முக்கிய மத யாத்திரை இடங்களை இணைக்கும் வந்தே பாரத் விரைவு ரயில் ஆகியவை ஜம்மு மக்களுக்கு மத்திய அரசு வழங்கிய சிறந்த திட்டமாகும். இது மத சுற்றுலாவுக்கு ஊக்கத்தை அளிப்பதாக உள்ளது. அதேபோல் தமிழ்நாட்டில் இருந்து கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு செல்லும் பக்தர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் சிறப்பு ரயில் இயக்க வேண்டும் என அந்த மனுவில் தர்மர் எம்.பி. வலியுறுத்தி கேட்டுக் கொண்டுள்ளார்.



**மதுரை மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் இருந்து உலக எய்ட்ஸ் தடுப்பு தின விழிப்புணர்வு பிரச்சார பேரணியை கலெக்டர் சங்கீதா கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

# முதுகுளத்தூர் அருகே அ.தி.மு.க. பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம்



**முதுகுளத்தூர், டிச. 2**


முதுகுளத்தூர் அருகே உள்ள மேலக்கொடுமலூர் கிராமத்தில் அதிமுகவின் பூத் கமிட்டியின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அதிமுக மேற்கு ஒன்றிய கழகம் சார்பாக மேலக்கொடுமலூர் கிராமத்தில் பூத் கமிட்டியின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் எம்.ஏ.முனியசாமி தலைமை தாங்கினர் மாநில எம்.ஜி.ஆர். மன்ற துணை செயலாளர் எம்.சுந்தரபாண்டியன் -கழக அமைப்பு செயலாளர் சுதா. கே.பரமசிவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேற்கு ஒன்றிய செயலாளர் கே.கர்ணன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

கழக எம்.ஜி.ஆர் மன்ற இணை செயலாளர் நிறைகுளத்தான்-ஒன்றிய கழக செயலாளர்கள் கமுதி எஸ்.பி.காளிமுத்து-முதுகுளத்தூர் எஸ்.டி.செந்தில்குமார்- முதுகுளத்தூர் நகர் கழக செயலாளர் முத்துராமலிங்கம்-எம்.ஜி.ஆர் மன்ற மாவட்ட துணைச்செயலாளர் கண்ணன்- விவசாய பிரிவு மாவட்ட செயலாளர் சண்முகபாண்டியன்- மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு இணை செயலாளர் நாகராஜன்- மற்றும் அதிமுக நிர்வாகிகள் சிவசுப்பிரமணியன்- அம்சுராஜ்- இளங்கோவன்- பிரபாகரன்-இருளப்பன்-சந்திரன்-சத்தியேந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## ஒன்றிய செயலாளர் விமலேஸ்வரன் தலைமையில்

# சின்னமனூரில் பூத் கமிட்டி அமைப்பது குறித்த ஆலோசனை கூட்டம்



**தேனி டிச 2**

தேனி மாவட்டம் சின்னமனூர் ஒன்றியத்தில் கழக ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான ஓ. பன்னீர்செல்வம் ஆணைக்கிணங்க ஒன்றிய கழகம் சார்பில் பூத் கமிட்டி அமைப்பது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் விமலேஸ்வரன் தலை மை தாங்கி பேரூர் செயலாளர்கள் மார்க்கையன் கோட்டை அகிலன், குச்சனூர்

மணிகண்டன் மற்றும் கிளை நிர்வாகிகளிடம் வாக்காளர் பட்டியலை வழங்கி பூத் கமிட்டி அமைப்பது குறித்து ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் ஒன்றிய அவைத்தலைவர் மணி, ஒன்றிய பொருளாளர் மாரிமுத்து, ஒன்றிய மாவட்ட பிரதிநிதி செல்லத்துரை, ஒன்றிய இளைஞரணி செயலாளர் சிவக்குமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# செந்துறை அருகே ஐயப்பன் கோவில் கும்பாபிஷேக விழா



**நத்தம், டிச,2**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே செந்துறை-குரும்பபட்டியில் தர்ம சாஸ்தா ஐயப்பன் கோவிலில் மஹாகும்பாபிஷேக விழா நடந்தது. இதில் முதல்நாள் கணபதி ஹோமம், ஸ்ரீ லட்சுமி ஹோமம், நவக்கிரக ஹோமம், பூரணாகுதி,தீபாராதனை, முதல் மற்றும் இரண்டாம் கால யாகசாலை பூஜைகள் நடந்தது. தொடர்ந்து மூன்றாம் காலயாக பூஜைகளை தொடர்ந்து மேளதாளம் முழங்க ஏற்கனவே யாகசாலையில் வைக்கப்பட்டிருந்த அழகர்மலை, கரந்த மலை, காசி, ராமேசுவரம், வைகை, உள்ளிட்ட பல்வேறு புனித ஸ்தலங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித தீர்த்த குடங்கள் ஊர்வலமாக கோபுர உச்சிக்கு எடுத்து செல்லப்பட்டது. அங்கு சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க புனித தீர்த்தம் குடம் குடமாக ஊற்றப்பட்டு பூஜைகளும், தீபாராதனைகளும் நடந்தது. இதில் கோவிலை சுற்றி ஏராளமான பக்தர்கள் நின்று கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். அப்போது வானத்தில் கருடன்கள் வட்டமிட்டது. தொடர்ந்து பக்தர்களுக்கு பூஜை மலர்களும்,புனித தீர்த்தமும்,அறுசுவைஉணவு அன்னதானமும் வழங்கப்பட்டது. விழாவில் முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன் எம்.எல்.ஏ, நத்தம் ஒன்றியக்குழு தலைவர் கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.விழா ஏற்பாடுகளை செந்துறை வட்டார ஐயப்ப சேவா சங்கம் மற்றும் குரும்பபட்டி ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

# திருமங்கலம் துணைக்கோள் நகரத்தில் வாலிபர் அடித்துக் கொலை: நண்பர்கள் 4 பேர் கைது

**திருமங்கலம்.டிச.02,**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே ஆஸ்டின்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மதுரை துணைக்கோள் நகரப்பகுதியில் கொலை சம்பவம் நடந்துள்ளதாக நேற்று முன்தினம் இரவு போலீசாருக்கு தகவல் வந்துள்ளது. இதன்ன தொடர்ந்து ஆஸ்டின்பட்டி போலீசார் துணைக்கோள் நகர பகுதி முழுவதும் தேடியதில் அங்குள்ள தனியார் கல்லூரி பின்புறம் உள்ள துணைக்கோள் நகர கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டி மோட்டார் அறையின் அருகே முட்புதரில் வாலிபர் பிணம் கிடந்ததுள்ளது.உடலை கைப்பற்றிய போலீசார் விசாரணை மேற்கொண்டதில், இறந்தவர் மதுரை தெற்கு வாசல் பகுதியைச் சேர்ந்த மீராகனி என்பவரது மகன் இஸ்மாயில் (20) என்பது தெரிய வந்தது. இஸ்மாயில் சாவுக்கான காரணம் குறித்து போலீசார் நடத்திய விசாரணையில் அதே பகுதியைச் சேர்ந்த சக்தி (25), கீரை துறை பகுதியைச் சேர்ந்த வசந்த் (20), மாடக்குளம் பகுதியைச் சேர்ந்த விக்னேஷ் (20),அவனியாபுரம் பகுதியைச் சேர்ந்த திருமூர்த்தி (21) ஆகியோர் இஸ்மாயிலின் நண்பர்கள் என்பதும் இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் இரவு திருமங்கலம் அருகேயுள்ள உச்சப்பட்டி துணைக்கோள் நகர் பகுதிக்கு வந்து அங்கிருந்த கீழ்நிலை நீர் தேக்க தொட்டி அறையில் அமர்ந்து ஒன்றாக சேர்ந்து மது அருந்தி உள்ளனர். மது போதை அதிகரித்ததால் நண்பர்களுக்குள்ளான பேச்சுவார்த்தை வாக்குவாதமாக மாறி உள்ளது வாக்குவாதம் முற்றி கைகலப்பானது.

# குஜிலியம்பாறை அரசு மருத்துவமனையில் கண் மருத்துவர் இல்லாததால் பொதுமக்கள் அவதி

**குஜிலியம்பாறை, டிச. 02**

குஜிலியம்பாறை தற்போது தனித்தாலுகவாக செயல்படுகிறது. இங்கு தாலுகா அலுவலகம், தீயணைப்பு நிலையம் என பல்வேறு துறை சார்ந்த அலுவலகங்கள் உள்ளது. இங்கு தமிழக அரசின் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. இங்கு பிரதி வாரம் செவ்வாய் வெள்ளி கிழமைகளில் கண் பரிசோதனை செய்ய கண் மருத்துவ உதவியாளர்கள் வருகை புரிந்து பொதுமக்களுக்கு கண் பரிசோதனை மருத்துவம் செய்த நிலையில் கண் மருத்துவ உதவியாளர் பணி மாறுதலில் சென்று விட்டதால் கடந்த இரண்டு மாதமாக இத்துறைக்கு யாரும் வரவில்லை இதனால் பொதுமக்கள் மிகவும் கண் சிகிச்சை பெறுவதற்க்கு அவதிப்படுகின்றனர். சமூக ஆர்வலர்கள் கூறும் போது குஜிலியம்பாறை தனித்தாலுகாவாக செயல்படுவதால் இங்கு செயல்படும் அரசு மருத்துவமனைக்கு கண் மருத்துவத்தில் நிபுணத்துவம் வாய்ந்த டாக்டர்களை நியமிக்க வேண்டும் இதனால் கண் மருத்துவம் சம்பந்தமான அனைத்து சிகிச்சைகளையும் பொதுமக்கள் பெறுவதற்கு வசதியாக இருக்கும் எனவே மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு உடனடியாக குஜிலியம்பாறை அரசு மருத்துவமனைக்கு கண் மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஜோகிபட்டியில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் விழிப்புணர்வு முகாம்



**ஒட்டன்சத்திரம் டிச.2.**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்துக்குட்பட்ட ஜோகிப்பட்டி ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் திண்டுக்கல் மாவட்ட மண்டல இணை இயக்குனர் மற்றும் பழனி கோட்டம் உதவி இயக்குனர் வழிகாட்டுதலின் படி சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம் ஊராட்சிமன்ற தலைவர் சுப்பிரமணி தலைமையில் நடைபெற்றது.

சிறந்த கால்நடை வளர்ப்பவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தடுப்பூசி மற்றும் குடற்புழு மருந்துகள் வழங்கப்பட்டது.

கால்நடை மருத்துவர் குமரேசன் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தார் இம்முகாமில்துணைத் தலைவர் கருணாநிதி சுரேஷ்குமார், ஊராட்சி செயலர் சரவணன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# ஒரு கோடி விதைப்பந்துகளை தயாரித்து விதைக்கும் திட்டம்

## விருதுநகர் கலெக்டர் ஜெயசீலன் துவக்கி வைத்தார்



**விருதுநகர் டிச.2.**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் கேசாடிமிர் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட நிர்வாகம், பள்ளிக் கல்வித் துறை மற்றும் விருதுநகர் மாவட்ட சுயநிதி தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு சார்பில், ஒரு கோடி விதைப்பந்துகளை தயாரித்து விதைக்கும் திட்டம் என்ற சிறப்பு திட்டம் மூலம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு விதைப்பந்து தயாரிப்பது குறித்த செய்முறை பயிற்சியினை மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் துவக்கி வைத்தார்.

மேலும், இத்திட்டத்தின் முதற்கட்டமாக இராஜபாளையம் கேசாடிமிர் மேல்நிலைப்பள்ளியில் ஒரு இலட்சம் விதைப் பந்துகள் மாணவர்களால் தயாரிக்கப்பட்டு வருவதை கலெக்டர் பார்வையிட்டார். பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

இந்த மாவட்டத்தில் உள்ள சுயநிதி தனியார் பள்ளிகள் கூட்டமைப்பில் உள்ள பள்ளிகளில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மூலம் மொத்தம் ஒரு கோடி விதைப்பந்துகள் தயாரிக்கப்படவுள்ளன. பின்னர், இந்த விதைப்பந்துகள் வனப்பகுதிகள், ஊராட்சி கண்மாய் கரையோரங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்களில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் மூலம் தூவ திட்டமிடப்பட்டுள்ளது.

மாணவர்கள் எதிர்காலத்தில் எந்த ஒரு துறையில் பணியில் இருந்தாலும் சுற்றுச்சூழல் குறித்த புரிதலோடு, மற்றவர்களுக்கு எடுத்து கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் வளர்மதி, மாவட்ட கல்வி அலுவலர்கள், அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அச்சம்பட்டி அருள்மிகு தேவி ராமக்கம்மாள் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா

## பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு



**திருமங்கலம்.டிச.02.**

மதுரை மாவட்டம்,திருமங்கலம் அருகே அச்சம்பட்டி கிராமத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு தேவி ஸ்ரீ ராமக்கம்மாள், அருள்மிகு மானூர் முத்தையா ஸ்ரீ கருப்பசாமி திருக்கோயில் கும்பாபிஷேக விழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து வழிபட்டனர்.

திருமங்கலம் தாலுகா, அச்சம்பட்டி கிராமத்தில் வெலமகுலநாயுடு ஜனகர கோத்ரம் தேக்கலவார் பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு தேவி ஸ்ரீ ராமக்கம்மாள், அருள்மிகு மானூர் முத்தையா ஸ்ரீ கருப்பசாமி திருக்கோயில் அமைந்துள்ளது.மிகவும் பிரமாண்டமான முறையில் தேர்த்தியுடன் கட்டப்பட்ட இந்த திருக்கோயில்களின் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக விழா கடந்த புதன் கிழமை அதிகாலை மங்கள வாத்தியங்கள் முழங்கிட யாகசாலை பூஜையுடன் சிறப்பாக தொடங்கியது.பல்வேறு பூஜைகளுடன் தொடர்ந்து மூன்று நாட்கள் தொடர்ந்து வேத மந்திரங்கள் முழங்கிட யாகசாலை பூஜைகள் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து நேற்று காலை மஹா பூர்ணாஹுதி,மஹா தீபாராதனை நடத்தப்பட்டு மேளதாளங்கள் முழங்கிட கடங்கள் புறப்பாடு நடைபெற்றது.

இதையடுத்து நேற்று 8 மணிக்கு மேல் 9 மணிக்குள் தனுர் லக்கனத்தில் ஆச்சார்ய பெருமக்கள் சண்முகம் சாஸ்திரிகள், சந்திரசேகர சாஸ்திரிகள வேத மந்திரங்கள் முழங்கிட கலசத்தில் புனித நீர் ஊற்றி கோபுர மஹா கும்பாபிசேகம் வெகு விமரிசையாக நடைபெற்று பக்தர்களுக்கு மஹா ஆசீர்வாதத்துடன் பிரசாதம் வழங்கப்பட்டது. பின்னர் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் கோவில் வளாகத்தில் வைத்து சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த கும்பாபிஷேக விழாவில் அச்சம்பட்டி, கட்ராம்பட்டி, நடுவக்கோட்டை, ஆலம்பட்டி, திரளி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்தும் வெளியூர்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு நடத்திச் சென்றனர். இந்த கும்பாபிசேக விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் கமிட்டி தலைவர் டாக்டர் .எஸ்.ராமகிருஷ்ணன், செயலாளர் திருமங்கலம் ஆர்.ஜெயராம், பொருளாளர் ஜி.கோபாலகிருஷ்ணன், எஸ்.பி., திருநாவுக்கரசு,முதன்மைதாரர் ஆர். ராஜ்குமார், பொறுப்பாளர் ஆர்.ராஜகோபால், கௌரவ தலைவர்கள் கோவிந்தராஜ், ராதாகிருஷ்ணன், ஆலோசகர்கள் பாண்டி கோபால், ராஜாராம், ராதாகிருஷ்ணன், சட்ட ஆலோசகர் மனோகரன், தொழில்நுட்ப பிரிவு ராஜகோபால் மற்றும் துணைத் தலைவர்கள் , இணைச் செயலாளர்கள், கமிட்டி உறுப்பினர்கள் பூசாரிகள் ராஜாராம், ராம்ராஜ் ஆகியோர் சிறப்புடன் செய்திருந்தனர். இவ்விழாவில் திருமங்கலம் காவல் ஆய்வாளர் விஜய் காண்டீபன் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# நரிக்குடியில் ஊரக வாழ்வாதார பயிற்சி முகாம்

**விருதுநகர் டிச. 2.**

நரிக்குடியில் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கிராமச் செழுமை விரிவாக்க திட்டம் தயாரித்தல் குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. தனி நபர் கழிப்பறை, காப்பீடு ,மின் இணைப்பு, குடும்ப அட்டை, சமையல் எரிவாயு, விவசாயம், கால்நடை வளர்ப்பு, ரோடு வசதி ,மருத்துவ வசதி, பள்ளி கட்டிடம் சீரமைத்தல், பஸ் வசதி, ஏரி ,,குளங்கள் பராமரிப்பு இளம் வயது திருமணம், பெண் குழந்தைகள் பாதுகாப்பு, குடும்ப வன்முறை, இடை நின்றல் மாணவர்கள், குடும்ப நல பிரச்சனைகள் குறித்து பொதுமக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்றுநர்கள் தேவி வாழ்வாதார இயக்கம் மேலாளர் ராமலட்சுமி ஒருங்கிணைப்பாளர்கள் முத்து பிரியா, கவிதா, சுப்புலட்சுமி, பயிற்சி அளித்தனர் .நிகழ்ச்சியில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில்

# ரூ.53.55 கோடி மதிப்பில் புதிய பால் பண்ணை தொழிற்சாலை: அமைச்சர் த.மனோ தங்கராஜ் அடிக்கல் நாட்டினார்

**தஞ்சாவூர்,டிச.02**

தஞ்சாவூர் மாவட்டம் நாஞ்சிகோட்டை ஊராட்சியில் பால்பண்ணை வளாகத்தில் புதிய பால் பண்ணை தொழிற்சாலை அமைப்பதற்கு அமைச்சர் த.மனோ தங்கராஜ் (01.12.2023) அடிக்கல் நாட்டினார்.

இந் நி கழ்ச் சி யில்; மாவட்ட கலெக்டர்.தீபக் ஜேக்கப். நாடாளுமன்ற உறுப்பினர்கள்.எஸ்.எஸ்.பழநிமாணிக்கம்.எஸ்.கல்யாணசுந்தரம்.செ.,ராமலிங்கம், மாவட்ட வருவாய் அலுவலர்தெ.தியாகராஜன் முன்னிலை வகித்தனர்.அமைச்சர்.த.மனோ தங்கராஜ் தெரிவித்ததாவது. தஞ்சாவூர் மாவட்டம் நாஞ்சிகோட்டை ஊராட்சியில் பால் பண்ணை வளாகத்தில் ரூ.53.55 கோடி மதிப்பில் நாளொன்றுக்கு 1 இலட்சம் திறனுடைய புதிய பால் பண்ணை தொழிற்சாலை அமைப்பதற்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம் திப்பிராஜபுரம் ஊராட்சியில் ரூ.19.5 இலட்சம் மதிப்பிலும், பம்பப்படையூர் ஊராட்சியில் ரூ.16 இலட்சம் மதிப்பிலும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுப்பட்டுள்ளது.அதனைத் தொடர்ந்து கும்பகோணம் தாராசுரத்தில் ரூபாய் 5 இலட்சம் மதிப்பில் புதிய ஆவின் பாலகத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, பால் உற்பத்தியை பெருக்குவதற்காக மாவட்டம் தோறும் வங்கிகள் மூலம் கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் கடன் உதவிக்கு 15 சதவீதம் வட்டி வசூலிக்கப்பட்டது.

தற்போது 9 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு மாதங்களில் 200 கோடி ரூபாய் அளவிற்கு புதிய கால்நடைகள் வாங்கவும், பராமரிக்கவும் கடன் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகளிடமிருந்து ஒரு லட்சத்து 10 ஆயிரம் விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. விரைவில் அனைத்து விவசாயிகளுக்கும் கால்நடை வாங்க வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்படும் என்றார்

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைச்சர்.த.மனோ தங்கராஜ் அமைச்சர் டாக்டர்.டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் தலைமையில் துறைரீதியான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், பால்பண்ணை கட்டமைப்பு விவரங்கள், கிராம பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு சங்கங்கள், பால் பாக்கெட்டுகள் மற்றும் பால் உபபொருள் உற்பத்தி, பால் கொள்முதல் விவரம், பால் விற்பனை விவரம் தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பில் உள்ள பால் விநியோக மையங்கள், நிதி நிலை அறிக்கை போன்ற பல்வேறு பொருளடக்கங்கள் இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், இக்கூட்டத்தில் அமைச்சர்.த.மனோ தங்கராஜ் கறவை மாடு கடன் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.216.40 கோடி மதிப்பில் கறவை மாடு வாங்குவதற்கு மானியத்துடன் கூடிய கடன் உதவித் தொகைக்கான ஆணையினையும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.50,000 மதிப்புள்ள செயற்கைமுறை கருவூட்டல் பயிற்சி முடித்த சங்க பணியாளர்களுக்கு ரூ.1.80 இலட்சம் மதிப்புள்ள கொள்கலனும் திருவலஞ்சுழி மற்றும் கரம்பயம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கத்திற்கு புதிய சங்கங்களுக்கான பதிவு சான்றிதழ்களும், பால் கொள்முதல் ஊக்கத்தொகையாக ரூ.18.14 இலட்சம் சஞ்சய்நகர் மற்றும் பட்டுக்கோட்டை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் புதிய சங்க கட்டடம் அமைக்க ரூ.78.08 இலட்சம் மதிப்பில் உள்ள ஆணைகளை ஈச்சங்கோட்டை, முன்னையம்பட்டி, காசாங்காடு மற்றும் கதிராமங்கலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள்.துரை.சந்திரசேகரன் .டி.கே.ஜி.நீலமேகம்.கா.அண்ணாதுரைக.அன்பழகன் தஞ்சாவூர் மாநகரட்சி மேயர்.சண் இராமநாதன், மாவட்ட ஊராட்சி தலைவர்.உஷா புண்ணியமூர்த்தி, மாநகராட்சி துணை மேயர்கள் மரு.அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்), .சு.ப.தமிழழகன் (கும்பகோணம்), ஆவின் பொது மேலாளர் மரு.சத்யா, பால்வளம் துணை பதிவாளர்கள். எஸ்.கே.விஜயலெட்சுமி.நவராஜ், கால்நடை மருத்துவ மேலாளர் மரு.மாதவக்குமாரன், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர்.சு.க.முத்துசெல்வம், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்டத்தில்

# ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.11.58 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகள்

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் துவக்கி வைத்தார்

பெரம்பலூர்,டிச.02

போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.11.58 கோடி மதிப்பீட்டில் கலெக்டர் கற்பகம் தலைமையில் பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் பல மக்கள் நலத்திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலமாத்தூர் ஊராட்சியில் சமக்ரா சிஷா திட்ட நிதியிலிருந்து பொதுப்பணித்துறை மூலம் ரூ. 20,52,000 மதிப்பீட்டில் மேலமாத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணியும், ஆதனூர் ஊராட்சியில் முதலமைச்சரின் கிராம சாலை திட்டத்தின் கீழ் ரூ. 1,48,00,000 மதிப்பீட்டில் ஆதனூர் முதல் பிலிமிசை வரை தார்சாலை அமைக்கும் பணியும், சிறுகன்பூர் ஊராட்சியில் ரூ. 39,62,000 மதிப்பீட்டில் அரசு துணை சுகாதார நிலையம் கட்டிடம் கட்டும் பணியும், கொளக்காநத்தம் ஊராட்சியில் நெடுஞ்சாலை துறை மூலம் ரூ. 8,24,00,000 மதிப்பீட்டில் கொளக்காநத்தம் முதல் காரை வரை 4800 மீ. சாலையை மாநில சாலையாக தரம் உயர்த்தி அகலப்படுத்தும் பணியும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.இந்த பணிகள் அனைத்தும் மிக விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் பணிகளை துரிதமாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதுமேலும், இலந்தங்குழி ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்ட சேமிப்பு நிதியிலிருந்து ரூ.15,00,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட தண்ணீர் தொட்டியையும், ரூ.41,80,000 மதிப்பீட்டில் வீட்டுக்கு வீடு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் திட்டத்தினையும், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ. 6,00,000 மதிப்பீட்டில் போடப்பட்ட தார்சாலையினையும், கொட்டரை ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.32,00,000 மதிப்பீட்டில் கொட்டரை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு 3 வகுப்பறை கொண்ட கட்டிடத்தினையும், குரும்பாபாளையம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.20,10,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டிடத்தினையும், காரை ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 11,00,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட முழுநேர பொதுவிநியோகக் கட்டிடத்தினையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தனர்.நிகழ்ச்சியில் ஆலத்தூர் ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, வேப்பூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மருவத்தூர் ராஜேந்திரன் மற்றும் அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூரில்

# உலக எய்ட்ஸ் தின விழிப்புணர்வு பேரணி கலெக்டர் தி.சாருஸ்ரீ துவக்கி வைத்தார்

**திருவாரூர்,டிச.02**

திருவாரூர் நகராட்சி அலுவலகம் எதிரில் உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி கையெழுத்து இயக்கம் மற்றும் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட கலெக்டர் மதி.தி.சாருஸ்ரீ, துவக்கி வைத்தார்கள். திருவாரூர் சட்டமன்ற உறுப்பி னர்.பூண்டி.கே.க லை வாணன் உடனிருந்தார். இப்பேரணியில் செஞ்சிலுவை சங்கத்தினை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட நபர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி சென்றனர். பேரணியானது, நகராட்சி அலுவலகம் எதிரில் தொடங்கி முக்கிய வீதிகள் வழியாக திருவாரூர் பழைய பேருந்து நிலையத்தில் முடிவடைந்தது. பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது... திருவாரூர் மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்றுகள் இல்லாத, எய்ட்ஸ் நோய் உள்ளவர்களை புறக்கணித்தல் இல்லாத, எய்ட்ஸ் நோய் தொடர்பான இறப்புகள் இல்லாத நிலையை உருவாக்க மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை புறக்கணிக்காமல் பாதுகாப்புடன் உள்ளார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் பாதிக்கப்பட்ட நபர்களின் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து, கல்வி உதவித் தொகை, மருத்துவ சிகிச்சைகளுக்காக நிதியுதவியும் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற சென்று வருவதற்காக கட்டணமில்லா பேருந்து பயண அட்டையும் அளிக்கப்படுகின்றது. புதிய நோயாளிகள் உருவாகாமல் தடுக்க பொதுமக்கள் மத்தியில் எய்ட்ஸ் குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது என்றார்.முன்னதாக, ஆட்டோவில் எய்ட்ஸ் விழிப்புணர்வு குறித்த ஒட்டுவில்லைகளை மாவட்ட கலெக்டர் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். பின்னர், எய்ட்ஸ் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்கள், புத்தகங்கள் அடங்கிய தற்காலிக விழிப்புணர்வு கண்காட்சி அரங்கத்தினை கலெக்டர் திறந்து வைத்து, எய்ட்ஸ் விழிப்புணர்வு குறித்த கலைநிகழ்ச்சிகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலர் மரு.புகழ், நகராட்சி ஆணையர்.மல்லிகா, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர்.கலியபெருமாள், திருவாரூர் நகர் மன்றத்தலைவர்.புவனப்பிரியா செந்தில், திருவாரூர் நகர் மன்ற துணைத்தலைவர்.அகிலா சந்திரசேகர், கூத்தாநல்லூர் நகர்மன்ற தலைவர்.பாத்திமா பஷீரா, நகர்மன்ற உறுப்பினர்.பிரகாஷ், திருவாரூர் வட்டாட்சியர்நக்கீரன், மாவட்ட மேற்பார்வையாளர், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுராமஜெயம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டத்தில்

# கரும்பு விவசாயிகளுக்கு முதற்கட்டமாக நிலுவைத் தொகை ரூ.6 லட்சத்து 86 ஆயிரத்துக்கான காசோலை

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்



மயிலாடுதுறை.டிச.2.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் திருமண்டகுடி ஆருரான் சர்க்கரை ஆலைக்கு கரும்பு உற்பத்தி செய்து வழங்கிய விவசாயிகளுக்கு முதற்கட்டமாக நிலுவை தொகை ரூ.6 லட்சத்து 86 ஆயிரத்து 400 க்கான காசோலைகளை சுற்று சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி இ.ஆ.ப., தலைமை வகிக்க, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் ,சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் , மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர்.உமாமகேஸ்வரி சங்கர் முன்னிலை வகித்தனர்.

திருமண்டக்குடி ஆருரான் சர்க்கரை ஆலைக்கு கடந்த 2016-2017,2017-2018 ஆகிய ஆண்டுகளில் கரும்பு உற்பத்தி செய்து வழங்கிய விவசாயிகளுக்கு நிலுவை தொகை இருந்ததையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பள்ளிக்கல்வி துறை அமைச்சர் முன்னிலையில் கரும்பு உற்பத்தி செய்து வழங்கிய விவசாயிகளுக்கு நிலுவை தொகை வழங்குவது தொடர்பாக திரு ஆருரான் சர்க்கரை ஆலை நிறுவகத்தினரிடம் பேச்சு வார்த்தை நடத்தியதன் அடிப்படையில் கரும்பு உற்பத்தி செய்து வழங்கிய விவசாயிகளுக்கு நிலுவை தொகை வழங்க சர்க்கரை ஆலை முன்னவந்ததன் அடிப்படையில் முதற்கட்டமாக 17 விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.6 லட்சத்து 86 ஆயிரத்து 400 நிலுவைத் தொகைக்கான காசோலைகளை சுற்றுசூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் . கே.மீனா, மாவட்ட வருவாய் அலுவலர்மு.மணிமேகலை, வேளாண்மைத்துறை இணை இயக்குனர் .சேகர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்ட இயக்குநர்.ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், மயிலாடுதுறை ஒன்றியக்குழுத் தலைவர்.காமாட்சி மூர்த்தி, குத்தாலம் ஒன்றியக்குழுத் தலைவர் மகேந்திரன், மயிலாடுதுறை நகர்மன்ற தலைவர் செல்வராஜ், கொள்ளிடம் ஒன்றியக்குழுத் தலைவர் ஜெயபிரகாஷ்சீர்காழி நகர் மன்ற தலைவர்.துர்கா பரமேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கொல்லுமாங்குடி சர்க்கரை ஆலை காலிஸ் டிஸ்டில்லரீஸ் நிறுவனம் சார்பில் கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு நிலுவை தொகை



**திருவாரூர் டிச 2**

திருவாரூர் மாவட்டம் கொல்லுமாங்குடியில் சர்க்கரை ஆலையின் தற்போதைய நிர்வாகமான காலிஸ் டிஸ்டில்லரீஸ் நிறுவனம் சார்பில் கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு நிலுவை தொகை வழங்கப்பட்டது.

தஞ்சை மாவட்டம் திருமண்டங்குடி திருவாரூர் மாவட்டம் கொல்லுமாங்குடி ஆகிய இடங்களில் ஆரூரான் சர்க்கரை ஆலை இயங்கி வந்தது.சர்க்கரை ஆலையின் அப்போதைய நிர்வாகம் விவசாயிகள் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கொடுக்க வேண்டிய கரும்புக்கான தொகையை வழங்கவில்லை.மேலும் ஒவ்வொரு கரும்பு விவசாயிகள் பெயரிலும் வங்கிகளில் கோடிகணக்கில் கடன் வாங்கி உள்ளது,

இதனிடையே ஆலை நிர்வாகம் ஆலை திவாலானதாக அறிவித்து,விவசாயிகளுக்கு தொகை வழங்காமல் விட்டதால் நீதிமன்ற உத்தரவுபடி ஆலையை கால்ஸ் நிறுவனம் வாங்கியது இதையடுத்து பழைய ஆலை நிர்வாகம் வழங்கவேண்டிய பணபாக்கியை கோர்ட் உத்தரவுபடி 57.36 சதவிகிதம் கடந்த ஜனவரி மாதம் காலிஸ் நிறுவனம் வழங்கி விட்டது.இதனிடையே கடந்த 17ம்தேதி தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கல்விதுறை அமைச்சர் தலைமையில் நடந்த முத்தரப்பு கூட்டத்தில் 57.36 சதவிகிதம் என்பதுடன் 17.64 சதவிகிதம் உயர்த்தி 75 சதவிகிதமாக சிறப்பு ஊக்க தொகையுடன் வழங்கவேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது.ஆகையால் இந்த ஊக்க தொகையை நேற்று முன்தினம் திருவாரூர் மாவட்டம் கொல்லுமாங்குடி ஆலை வளாகத்தில் நடைப்பெற்ற நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.

இதில் கால்ஸ்நிறுவனத்தின் நிர்வாக ஒருங்கிணைப்பாளர் முனுசாமி,ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி ஆகியோர்,புதுவை மாநில முன்னாள் அமைச்சரும்,கரும்பு விவசாயிமான கமலகண்ணனுக்கு ரூ1 லட்சத்து 10ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினர்.இன்று சுமார் 100 விவசாயிகளுக்கு 25லட்சம் வரை சிறப்பு ஊக்க,நிலுவை தொகை வழங்கப்பட்டது,இதில் விவசாயிகள் சங்கத்தலைவர் மதியழகன்,மற்றும் விவசாய சங்க நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்துக் கொண்டனர்.

# உலக எய்ட்ஸ் தின விழிப்புணர்வு பேரணி

**அரியலூர், டிச.2**

உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி அரியலூரில் இந்தியன் செஞ்சிலுவைச் சங்கம், சுகாதாரப் பணிகள் துறை சார்பில் சார்பில் விழிப்புணர்வுப் பேரணி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.அண்ணாசிலை அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அஜிதா ஆகியோர் கலந்து கொண்டு பேரணியை கொடியசைத்து தொடக்கி வைத்தனர்.பேரணியானது, பிரதானச் சாலை வழியாகச் சென்று நிர்மலா பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நிறைவடைந்தது. பின்னர் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பேரணியில் நிர்மலா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, நிர்மலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அரசு நகர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, வீனஸ் மெட்ரிக் உயர்நிலைப் பள்ளி, தூய மாதா உயர்நிலைப் பள்ளி, சி.எஸ்.ஐ மேல்நிலைப்பள்ளி, அரியலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் இருந்து செஞ்சிலுவைச் சங்க மாணவ, மாணவிகள் 300 பேர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட பொருளாளர் எழில் நன்றி தெரிவித்தார்.



Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# விஜயகாந்த் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டி திருவாரூர் நகர தேமுதிக சார்பில் சிறப்பு யாகம்



**திருவாரூர் டிச 2**

தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல் நிலை பாதிப்பு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு செயற்கை சுவாசம் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவமனை நிர்வாகம் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது. இந்த செய்தி அறிந்த தேமுதிக தொண்டர்கள் மிகுந்த அதிர்ச்சி அடைந்தனர்.

இருந்த போதிலும் இறைவன் மீது நம்பிக்கை வைத்து அவர் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டி தமிழகம் முழுவதும் தினந்தோறும் பிராத்தனை செய்து வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று முன்தினம் திருவாரூர் கீழவீதியில் உள்ள பழனியாண்டவர் முருகன் கோயிலில் தேமுதிக நகர கழகம் சார்பில் சிறப்பு யாகம்,அபிஷேகம் செய்யப்பட்டு அன்னதானம் வழங் கப் பட் டன.பின் னர் தேரடி பிள்ளையார் கோயிலில் 150 தேங்காய் உடைக்கப்பட்டது.நகர கழக செயலாளர் சதீஷ்குமார் தலைமையில் நடைப்பெற்ற இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர் அருள்,நகர பொருளாளர் முத்து,அவைத்தலைவர் கார்த்திகேயன், துணை செயலாளர்கள் சிவா,பிரகாஷ்,செல்லபாண்டி,இளைஞரணி செயலாளர்கள் ராஜா,திருமுருகன், கேப்டன் மன்ற செயலாளர்கள் ராஜா, மீனாட்சி சுந்தரம், மாவட்ட பிரதிநிதிகள் மனோகர், பரமேஷ்வரன், செல்வகுமார்,மாவட்ட இ.து.செயலாளர் விஜயபாலன்,இணையதள பொறுப்பாளர் மாலிக் அன்சாரி உட்பட அனைத்து வார்டு செயலாளர்கள்,பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டத்தில்

# உலக எய்ட்ஸ் தின விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள்

## கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா வழங்கினார்



**ஈரோடு,டிச.02-**

ஈரோடு கலெக்டர் அலுவலக வளாகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் கீழ், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் சார்பில் உலக எய்ட்ஸ் தின விழா விழிப்புணர்வு பேரணியை, கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தொடங்கி வைத்தார்.

உலக எய்ட்ஸ் தினமானது ஆண்டுதோறும்; டிசம்பர் முதல் நாள் உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, ஈரோடு மாவட்டத்தில்; தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் வழிகாட்டுதலின் படி மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் சார்பாக உலக எய்ட்ஸ் தினம் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆண்டின் உலக எய்ட்ஸ் தினத்தின் மையக்கருத்தானது ';சமூகங்களுடன் சேர்ந்து எச்.ஐ.விஎய்ட்ஸ் தொற்றினை குறைக்கும் செயலை முன்னெடுப்போம்' என்பதாகும். அதன்படி, மாவட்ட ஆட்சிததலைவர் தலைமையில்,

'எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் குறித்து முழுமையாக அறிந்திடுவேன். அறிந்ததை என் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் தெரிவித்திடுவேன். புதிய எச்.ஐ.வி எய்ட்ஸ் தொற்று இல்லாத குடும்பம் மற்றும் சமூகத்தை உருவாக்கிடுவேன். தன்னார்வமாக இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள முன்வருவேன். எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் தொற்றுள்ளோரை அரவணைப்பேன். அவர்களுக்கு சம உரிமை அளிப்பேன் என உளமார உறுதி அளிக்கிறேன்' என்று,அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உலக எய்ட்ஸ் தின உறுதி மொழியினை ஏற்றுக்கொண்டனர்.

மேலும், கலெக்டர் , எச்.ஐ.விஎய்ட்ஸ் விழிப்புணர்வு உறுதிமொழி கையெழுத்து இயக்கத்தினையும் தொடங்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து, கலெக்டர் சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணவமாணவிகளுக்கு நடத்தப்பட்ட நாடகம் மற்றும் ரீல் மேக்கிங் போட்டிகளில் வெற்றி பெற்ற நபர்களுக்கும் மற்றும் பள்ளி மாண வ மா ண வி யர் க ளிடையே நடத்தப்பட்ட வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்ற நபர்களுக்கும், சான்றிதழ்கள் வழங்கி, எச்.ஐ.வி.எய்ட்ஸ் விழிப்புணர்வு ஒட்டுவில்லை அடங்கிய ஆட்டோ பயணத்தினையும் துவக்கி வைத்தார்.

மேலும், எச்.ஐ.விஎய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணி மற்றும் கிராமிய கலை எச்.ஐ.வி விழிப்புணர்வு இயக்கத்தையும் துவக்கி வைத்தார். இப்பேரணியில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்க ஊழியர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன ஊழியர்கள் மற்றும் 200 கல்லூரி மாண வ மா ண வி யர் கள்; எச்.ஐ.விஎய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தியும், விழிப்புணர்வு கோஷங்களிட்டும் பேரணியில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜவகர் இகாப., இணை இயக்குநர் (நலப்பணிகள்) (பொ) மரு.ஆர்.பிரேமகுமாரி, துணை இயக்குநர் (சுகாதார பணிகள் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலர்) மரு.எஸ்.சோ ம சுந் த ரம், துணை இயக்குநர் (குடும்ப நலம்) மரு.செந்தில்குமார், மாநகர நல அலுவலர் மரு. வி.பிரகாஷ், மாவட்ட திட்ட மேலாளர் (மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலகு) பெ.துரைசாமி உட்பட தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்க ஊழியர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள் மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் என சுமார் 400 நபர்கள் கலந்து கொண்டனர்.

# உலக எச்.ஐ.வி.எய்ட்ஸ் தின விழிப்புணர்வு பேரணி: ஊட்டியில் கலெக்டர் மு.அருணா கொடியசைத்து துவக்கி வைத்தார்



**ஊட்டி, டிச.02-**

ஊட்டியில் உலக எச்.ஐ.விஎய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் மு.அருணா கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

நீலகிரி மாவட்ட தமிழ் நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில் ஊட்டி இரயில் நிலைய முகப்பிலிருந்து, உலக எச்.ஐ.விஎய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு, நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட கலெக்டர் மு.அருணா கொடியசைத்து

தொடங்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார்.

இப்பேரணியில் ஜெ.எஸ்.எஸ் பார்மஸி கல்லூரி, அரசு மருத்துவக்கல்லூரி , சாந்தி விஜயா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஊட்டி பிரிக்ஸ் மேல்நிலைப் பள்ளி, செவிலியர் பயிற்சி பள்ளி, கேத்தி சி.எஸ்.ஐ பொறியியல் கல்லூரி, ஊட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, பெத்லகேம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு, 'வாழ்வோம் வாழ்வோம் ஒருவனுக்கு ஒருத்தி என வாழ்வோம், உருவாக்குவோம், உருவாக்குவோம், எச்.ஐ.வி எய்ட்ஸ் இல்லாத உலகத்தை உருவாக்குவோம், ஆர்ஆர்சி திட்டத்தில் இணைந்திடுவீர், எய்ட்ஸ் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவீர், பாதுகாப்போம், பாதுகாப்போம் தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி எய்ட்ஸ் வருவதை தடுப்போம்' உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்திச் சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இப்பேரணியில் கலெக்டர் , எச்.ஐ.விஎய்ட்ஸ் விழிப்புணர்வு ஒட்டுவில்லைகளை ஆட்டோக்களில் ஒட்டி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். உதகை இரயில் நிலைய முகப்பில் தொடங்கிய இப்பேரணியானது மார்க்கெட், மணிகூண்டு, ஏடிசி வழியாக சென்று சாந்தி விஜயா பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் நிறைவு பெற்றது.

இப்பேரணியில், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலர் மரு.பாலுசாமி, ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் மகராஜ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கீதா, அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை துணை முதல்வர் மரு.ஜெயலலிதா, இருப்பிட மருத்துவ அலுவலர் மரு.ரவிசங்கர், மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலக திட்ட மேலாளர் அறிவழகன், வட்டாட்சியர் சரவணகுமார், மருத்துவர்கள், செவிலியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆதனைத்தொடர்ந்து ஊட்டியிலுள்ள தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில், உலக எய்ட்ஸ் தினம் 2023-ஐ முன்னிட்டு, மாவட்ட கலெக்டர் மு.அருணா விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தில் கையெழுத்திட்டு, 'சமூகங்களுடன் சேர்ந்து எச்.ஐ.வி எய்ட்ஸ் தொற்றினை குறைக்கும் செயலை முன்னெடுப்போம்' என்கின்ற உறுதிமொழியினை வாசிக்க, அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர். அதனைதொடர்ந்து, மாவட்ட கலெக்டர் 16 பயனாளிகளுக்கு தற்காலிக இயலாமைக்கான உதவித்தொகை மாதந்தோறும் பெறுவதற்கான ஆணைகளை வழங்கினார்.

# நீலகிரியில் அமைச்சரை வரவேற்று வைத்துள்ள பிளக்ஸ் பேனர்களை அகற்ற வலியுறுத்தி அ.தி.மு.க.வினர் மாவட்ட எஸ்.பி.,அலுவலகத்தில் மனு



**ஊட்டி, டிச.02-**

நீலகிரியில் தி.மு.க. அமைச்சரை வரவேற்று ஆபத்தான முறையில் வைத்துள்ள பிளக்ஸ் பேனர்களை உடனடியாக அகற்ற வேண்டும் என்று வலியுறுத்தி அதிமுக மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத் தலைமையில் அ.தி.மு.க.வினர் நேற்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:-

மலை மாவட்டமான நீலகிரியில் கட்சிகள் மற்றும் அமைப்புகள் சார்பில் தோரணங்கள் விளம்பர பதாகைகள் பிளக்ஸ், பேனர்கள் வைக்க கோர்ட்டு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில் நீலகிரி மாவட்டம் ஊட்டியில் நடக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வரும் விளை யாட் டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை வரவேற்று ஊட்டி, குன்னூர் உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விளம்பர பதாகைகள், பிளக்ஸ் பேனர்கள் சாலை மற்றும் நடைபாதைகளை ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ளன.இது மாவட்ட நிர்வாகம் மற்றும் உயர் நீதிமன்ற உத்தரவுக்கு எதிரான செயல் ஆகும். நடைபாதை சாலையை ஆக்கிரமித்து விளம்பர பதாகைகள் வைக் கப் பட் டுள் ள தால் பொதுமக்கள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக மாவட்ட முழுவதும் ஆளும்கட்சியினர் சார்பில் ஆபத்தான முறையில் வைக்கப்பட்டுள்ள விளம்பர பதாகைகளை உடனடியாக அகற்ற வேண்டும். கடந்த காலங்களில் அதிமுக அமைச்சர்கள் நீலகிரி வந்த போது இதுபோன்ற விதிமீறல் செயல்பாடுகளில் அதிமுகவினர் ஈடுபடவில்லை. அவ்வாறு அகற்ற நடவடிக்கை எடுக்காவிட்டால் பொதுமக்களை ஒன்றிணைத்து போராட்டம் நடத்தப்படும். இவ்வாறு மனுவில்; கூறப்பட்டுள்ளது.

அப்போது அவருடன் முன்னாள் எம்.,பி அர்ஜுனன், முன்னாள் நகர மன்ற துணைத் தலைவர் கோபால கிருஷ்ணன், முன்னாள் அரசு வழக்கறிஞர் அனந்தகிருஷ்ணன், நகர செயலாளர் சண்முகம், கவுன்சிலர் அக்கிம் பாபு உள்பட பலர் இருந்தனர்.

# எய்ட்ஸ் பாதிப்பு பரவாமல் தடுக்க சுய ஒழுக்கம் முக்கியம்: விழிப்புணர்வு முகாமில் அறிவுரை

**ஊட்டி, டிச.02-**

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அரசு மேல்நிலை பள்ளியில் நாட்டு நலப்பணி திட்டம் மற்றும் கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், ஏகம் பவுண்டேஷன், மகாத்மா காந்தி பொது சேவை மையம் ஆகியன இணைந்து நடத்திய எய்ட்ஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் நாட்டு நல பணி திட்ட அலுவலர் நந்தகோபால் வரவேற்றார். பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியர் செந்தில் தலைமை தாங்கினார். முதுகலை ஆசிரியர் தண்டபாணி, மகாத்மா காந்தி பொது சேவை மைய தலைவர் நௌசாத், பந்தலூர் அரசு மருத்துவமனை எய்ட்ஸ் ஆலோசனை மைய ஆலோசகர் சத்யன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசும்போது ஒழுக்கம் தவறுவது எய்ட்ஸ் பரவ முக்கியமான காரணம். தவறான நபர்களுடன் உடலுறவு முறைதான் 90 சதவீத எயிட்ஸ் பாதிப்பு ஏற்பட காரணம். மற்றபடி சோதனை செய்யாத இரத்த பரிமாற்றங்கள், தாய்க்கு தொற்று ஏற்பட்டால் அதன்மூலம் குழந்தைக்கு பரவுதல், இரத்த படிந்த பிளேடு மற்றும் ஊசிகள் மூலம் பரவும் வாய்ப்பு உள்ளது எனினும் பல்வேறு கட்டுப்பாடுகள் மூலம் இவை பெரும்பாலும் தடை செய்யப்பட்டுள்ளது. எய்ட்ஸ் பாதிப்பு பரவாமல் தடுக்க சுய ஒழுக்கம் முக்கியம் அதன்படி ஒருவருக்கு ஒருவர் என்கிற கட்டுப்பாட்டுடன் வாழவேண்டும். எய்ட்ஸ் முற்றிலும் ஒழிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. பாதிப்புகளை தடுக்க அரசு மருத்துவமனைகளில் இலவச இரத்த பரிசோதனைகள் மேற்கொள்ளபட்டு வருகிறது. பாதிப்புகளுக்கு சிகிச்சை கூட்டு மருந்துகளும் வழங்கபடுகிறது என்றார். ஏகம் பவுண்டேஷன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரவீந்திரன் பேசும்போது எய்ட்ஸ் நோயினால் மேலும் யாரும் பாதிக்காமல் தடுக்க வேண்டியது அவசியம். எய்ட்ஸ் பாதித்தவரை ஒதுக்கி வைக்காமல் அவருக்கும் சம உரிமைகள் வழங்க வேண்டும், எச் ஐ வி கிருமி தொற்றினால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி இழந்து பாதிக்கப்படுவது எய்ட்ஸ் நோய் ஆகும். இதனை தடுக்க அனைவரும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார். பந்தலூர் அரசு மருத்துவமனை காசநோய் பிரிவு மேற்பார்வையாளர் விஜயகுமார் பேசும்போது காசநோய் என்பது பாக்டீரியாவினால் பரவுகிறது. ஏய்ட்ஸ் வைரஸ் மூலம் பரவுகிறது. நாள்பட்ட சளி, தொடர் காய்ச்சல், உடல் எடை குறைவு உள்ளிட்டவை இருப்பின் சளி பரிசோதனை மேற்கொண்டால் அதில் காசநோய் பாதிப்பு உள்ளதா என அறியலாம். முதற்கட்ட பாதிப்புக்கு 6 மாத மாத்திரைகள் அடுத்த கட்டமாக ஊசிகள் என மருத்துவம் வழங்கப்படுகிறது. இதனால் குணப்படுத்த முடியும். நீலகிரி மாவட்டம் காசநோய் தொற்று குறைவான மாவட்டமாக உள்ளது. 2030க்குள் காசநோய் ஒழிக்கும் முனைப்பில் பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்த படுகிறது. காசநோய் மற்றும் எய்ட்ஸ் ஆகியவற்றுக்கு பரிசோதனைகள் மற்றும் மருந்துகள் அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது என்றார். தொடர்ந்து மாணவர்கள் ஆசிரியர்கள் எய்ட்ஸ் தடுப்பு சின்னம் வடிவில் நின்று எய்ட்ஸ் தடுப்பு குறித்த உறுதி மொழியினை எடுத்து கொண்டனர்.

# ஊட்டி ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டம்



**ஊட்டி, டிச.02-**

ஊட்டி ஊராட்சி ஒன்றியக்குழு மாதாந்திர கூட்டம் தலைவர் மாயன்(எ)மாதன் தலைமையில் கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. வட்டார வளர்ச்சி அலுவலர் ஸ்ரீதரன் முன்னிலை வகித்தார். மேலாளர்குமார்கூட்டப்பொருள் குறித்த பேசினார்.

இக்கூட்டத்தில் வரவு-செலவு கணக்கு வாசித்து அங்கீகரிக்கப்பட்டது. கவுன்சிலர்களின் கோரிக்கையை ஏற்று அனைத்து வார்டுகளுக்கும் பொதுநிதியிலிருந்து தலா ரூ. 2 லட்சத்தில் வளர்ச்சிப் பணிகள் வழங்குவது, ஆதிதிராவிடர் வசிக்கும் கிராமங்களில்; அடிப்படை தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி தருவது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் வார்டு கவுன்சிலர்கள் கே.ஆர்.காமராஜ், எம்.சிவசுப்ரமணியன், எ.சந்தோஷ், சரோஜா, என்.சாரதா, ஆர்.ஜெயபால், எம். எஸ்.தமிழ்வாணி, சி.பாலகிருஷ்ணன், எஸ்.கல்பனா, அ.பிரேமா, பி.ஷீலாராணி, பி.அஞ்சலி, ஆர்.கிட்டான ஆகியோர் கலந்து கொண்டனர். முடிவில் துணை தலைவர் சித்ரா நன்றி கூறினார்.

# கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி துவக்கம்



**ஈரோடு.டிச.02-**

ஈரோடு கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் 2023-2024 ஆம் ஆண்டிற்கான அஞ்சல்வழி/பகுதிநேர கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி துவக்கவிழா 01.12.2023 இன்று காலை 09.30 மணிக்கு நடைபெற்றது.

இவ்விழாவிற்கு ஈரோடு கூட்டுறவு மேலாண்மை நிலையத்தின் துணைப்பதிவாளர் / முதல்வர் ச.கணேசன் தலைமை தாங்கி, குத்துவிளக்கேற்றி விழாவினை துவக்கி வைத்தார். அவர்தம் உரையில் கூட்டுறவு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறுவதற்கு கூட்டுறவு பட்டயப்பயிற்சி மிகவும் அவசியம். எதிர்வரும் 24.12.2023 அன்று மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் மூலம் நடைபெறும் கூட்டுறவுச் சங்கங்களின் உதவியாளர் பணியிடத்திற்கு போட்டித்தேர்வில் கலந்து கொள்ள இப்பயிற்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இப்பயிற்சியில் தற்சமயம் 147 மாணவர்கள், 256 மாணவியர்கள் ஆகமொத்தம் 403 மாணவ, மாணவியர்கள் சேர்ந்துள்ளார்கள். இப்பயிற்சியினை முறையாக பயன்படுத்தி போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.இவ்விழாவில் ஈரோடு கூட்டுறவு மேலாண்மை நிலையத்தின் விரிவுரையாளர்களான ஓய்வு பெற்ற துணைப் பதிவாளர்கள் கே.சங்கப்பிள்ளை , ஆர்.தியாகராஜன் , கே.தங்கமுத்து , என்.ஸ்ரீதர் , ஜி.என்.சண்முகசுந்தரம் , ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஓய்வு பெற்ற பொது மேலாளர் எம். ராஜசேகரன் மற்றும் ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றிய மேலாளர் கே.சக்திவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.முன்னதாக ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் ஓய்வு பெற்ற கூட்டுறவு பிரச்சார அலுவலர் எஸ்.ஆனந்தராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார். ஈரோடு கூட்டுறவு மேலாண்மை நிலைய இளநிலை உதவியாளர் ச. சசிக்குமார் நன்றி கூறினார்.



**ஈரோடு மாநகராட்சியின் மூன்றாவது மண்டலத்தின் முதல் மாதாந்திர கூட்டம் மண்டல தலைவர் சசிகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் செயற்பொறியாளர் சண்முக வடிவு உதவி செயற்பொறியாளர் பி.ஆனந்த் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்**



**ஈரோடுமாநகராட்சி1ம்மண்டலகூட்டம்சூரியம்பாளையம்மண்டலஅலுவலகத்தில்மண்டல தலைவர் பிகே. பழனிச்சாமி தலைமையில் நடந்தது. உதவி ஆணையர் அண்ணாதுரை முன்னிலை வைத்தார். 15 வார்டுகளில் மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து விவாதம் மற்றும் ஆலோசனை நடத்தப்பட்டது. பொறியாளர் பாஸ்கர் சுகாதார அதிகாரி தங்கராஜ் உதவி பொறியாளர் தனுஷ்கோடி கலந்து கொண்டனர்**



**ஈரோடுமாநகராட்சி2வதுமண்டலமண்டலதலைவர்சுப்பிரமணி(எ)காட்டுசுப்புதலைமையில் நடந்தது. இதில் உதவி பொறியாளர் பாஸ்கர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்களுக்கு கலைஞர் சிலை மற்றும் அண்ணா சிலை வழங்கப்பட்டது**



**மாநகராட்சி நான்காவது மண்டல கூட்டம் மண்டல தலைவர் குறிஞ்சி தண்டபாணி தலைமையில் நடைபெற்றது இதில் செயற்பொறியாளர் சண்முகவடிவு உதவி ஆணையர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் வார்டு கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.**

### டி-20 உலகக் கோப்பை தொடர்:
# இந்திய கேப்டன் ரோகித் சர்மா..?



**மும்பை, டிச. 02-**
டி-20 உலகக் கோப்பை தொடரில் இந்திய அணி கேப்டனாக ரோகித் சர்மா தேர்வாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் டி-20 தொடரில் விராட் கோலி இடம்பெற மாட்டார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

**சுற்றுப் பயணம்...**
இந்திய அணி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து மூன்று டி-20 மற்றும் ஒருநாள் போட்டிகள், இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாட இருக்கிறது. டெஸ்ட் தொடரில் விளையாடும் இந்திய அணிக்கு கேப்டனாக ரோகித் சர்மா அறிவிக்கப்பட்டுள்ளார். ஒருநாள் போட்டிக்கான இந்திய அணிக்கு கே.எல். ராகுல் கேப்டனாகவும், டி-20 தொடருக்கு சூர்யகுமார் யாதவ் கேப்டனாக நியமிக்கப்பட்டு உள்ளனர்.

**கேப்டனாக நியமனம்...**
டி-20 தொடருக்கான இந்திய அணியில் ரோகித், விராட் கோலி இடம் பெறவில்லை. இனி இவர்கள் டி-20 போட்டிகளில் விளையாடமாட்டார்கள் என தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் அடுத்த ஆண்டு நடைபெறும் டி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் கேப்டனாக ரோகித் சர்மா செயல்பட உள்ளதாக பி.சி.சி.ஐ. வட்டாரங்கள் தெரிவிக்கின்றனர்.

**விராட் கோலி இல்லை...**
மேலும் இளம் வீரர்கள் அதிகமாக உள்ளதால் விராட் கோலி இந்த தொடரில் விளையாடுவது சந்தேகம் தான் எனவும் தகவல் வெளியாகி உள்ளது. அப்படி ரோகித் கேப்டனாக செயல்பட்டால், கில் அல்லது ஜெய்ஸ்வால் ஆகியோரில் ஒருவருடன் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### டி-20 உலகக்கோப்பை வரை
# ரோகித் சர்மா கேப்டனாக தொடர கங்குலி விருப்பம்

**மும்பை, டிச. 02-**
குறைந்தது அடுத்த ஆண்டு டி20 உலகக் கோப்பை வரை இந்திய அணியை ரோகித் சர்மா கேப்டனாக வழிநடத்த வேண்டுமென இந்திய அணியின் முன்னாள் கேப்டன் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

**ஆஸி., வெற்றி...**
உலகக் கோப்பையில் தொடர்ச்சியாக 10 வெற்றிகளைப் பெற்று ஆதிக்கம் செலுத்திய நிலையில், இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியாவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தது இந்தியா. இந்திய அணி தோல்வியடைந்தபோதிலும், ரோகித் சர்மா தலைமையில் அணி தங்களது அபார திறனை வெளிப்படுத்தியதாக பலரும் பாராட்டி வருகின்றனர். உலகக் கோப்பைக்குப் பிறகு இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் விளையாடும் டி20 தொடர் தொடங்கி நடைபெற்று வருகிறது.

**ரோகித்திற்கு ஓய்வு...**
இந்த டி20 தொடரில் ரோகித் சர்மா மற்றும் விராட் கோலிக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது. அதேபோல தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான டி20 மற்றும் ஒருநாள் தொடரிலும் ரோகித் சர்மா மற்றும் விராட் கோலிக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், குறைந்தது அடுத்த ஆண்டு டி20 உலகக் கோப்பை வரை இந்திய அணியை ரோகித் சர்மா கேப்டனாக வழிநடத்த வேண்டுமென இந்திய அணியின் முன்னாள் கேப்டன் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

**புத்துணர்ச்சியுடன்...**
இது தொடர்பாக அவர் பேசியதாவது., ரோகித் மற்றும் விராட் கோலிக்கு இந்த ஓய்வு என்பது மிகவும் அவசியமானது. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐசிசி டி20 போட்டியில் புத்துணர்ச்சியுடன் களமிறங்க அவர்களுக்கு இந்த ஓய்வு உதவியாக இருக்கும். அனைத்து வடிவிலான போட்டிகளிலும் விளையாடுவதற்கு ரோகித் சர்மா தயாரான பிறகு, அவர் இந்திய அணியின் கேப்டனாக செயல்பட வேண்டும். ஏனெனில், அவர் உலகக் கோப்பையில் இந்திய அணியை சிறப்பாக வழிநடத்தினார்.

**அமெரிக்காவில்...**
உலகக் கோப்பையில் இந்திய அணி சிறப்பாக விளையாடியதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ரோகித் மற்றும் விராட் இருவரும் இந்திய அணியின் மிக முக்கியமான வீரர்கள். குறைந்தது அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள டி20 உலகக் கோப்பை வரையிலாவது ரோகித் சர்மா இந்திய அணியை கேப்டனாக வழிநடத்த வேண்டும் என எதிர்பார்க்கிறேன் என்றார். ஐசிசி டி20 உலகக் கோப்பை அடுத்த ஆண்டு ஜூன் மாதத்தில் அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

### டி-20 உலகக் கோப்பை போட்டி:
# தொடக்க வீரர்களாக களமிறங்க 5 பேர் இடையே கடும் போட்டி



**மும்பை, டிச. 02-**
டி-20 உலகக் கோப்பையில் தொடக்க வீரர்கள் யார் என்பது குறித்து 5 பேர் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

**2007-ல் இந்திய அணி...**
இதுவரை 8 டி-20 உலகக் கோப்பை தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் இங்கிலாந்து (2010, 2022), வெஸ்ட் இண்டீஸ் (2012, 2016) தலா 2 முறையும், இந்தியா (2007), பாகிஸ்தான் (2009) இலங்கை (2014), ஆஸ்திரேலியா (2021) தலா ஒரு முறையும் உலகக் கோப்பையை வென்றுள்ளன. 9-வது டி-20 உலகக் கோப்பை போட்டி அடுத்த ஆண்டு ஜூன் 4-ந்தேதி முதல் 30-ந் தேதி வரை வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் நடக்கிறது.

**டோனி தலைமையில்...**
ஐ.சி.சி. போட்டியில் இந்திய அணி சாம்பியன் பட்டம் பெற்று 10 ஆண்டுகள் ஆகிறது. கடைசியாக 2013-ம் ஆண்டு சாம்பியன்ஸ் டிராபியை டோனி தலைமையிலான அணி கைப்பற்றியது. சமீபத்தில் நடந்த ஐ.சி.சி. உலகக் கோப்பையில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி இறுதிப் போட்டியில் தோற்றது. சொந்த மண்ணில் நடந்த போட்டியில் சாம்பியன் பட்டம் பெறாதது ஏமாற்றத்தை அளித்தது. தற்போது டி-20 உலகக் கோப்பை போட்டியில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. சிறந்த வீரர்களை தேர்வு செய்ய வேண்டும் என்பதில் கிரிக்கெட் வாரியம் உறுதியாக இருக்கிறது.

**கடும் போட்டி...**
டி-20 உலகக் கோப்பை போட்டிக்கு ரோகித் சர்மாவை கேப்டனாக நியமிக்க கிரிக்கெட் வாரியம் முடிவு செய்து அவரை அணுகியதாக தகவல் வெளியானது. கடந்த ஆண்டு உலகக் கோப்பை அரையிறுதியில் ஏற்பட்ட தோல்விக்கு பிறகு அவர் டி-20 போட்டியில் ஆடவில்லை. தென்ஆப்பிரிக்க தொடரிலும் அவர் ஓய்வு கேட்டுள்ளார். 20 ஓவர் உலகக்கோப்பை போட்டியில் தொடக்க வீரர்களாக யார் ஆடுவார்கள்? என்பதில் கடும் போட்டி நிலவுகிறது. ஜெய்ஸ்வால், இஷான் கிஷன், ருதுராஜ் கெய்க்வாட், ரோகித் சர்மா, சுப்மன் கில் ஆகிய 5 பேர் தொடக்க வரிசைக்கான போட்டியில் உள்ளனர்.

**தேர்வு குழுவுக்கு...**
ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தற்போது நடைபெறு வரும் 20 ஓவர் தொடரில் ஜெய்ஸ்வால், ருதுராஜ் கெய்க்வாட்டும் தொடக்க வீரர்களாக வருகிறார்கள். அவர்கள் ஆட்டம் அதிரடியாகவே இருக்கிறது. அதே நேரத்தில் ரோகித் சர்மா, சுப்மன் கில் தொடக்க வரிசையில் அபாரமாக ஆடக் கூடியவர்கள். இதற்கிடையே அவ்வப்போது இஷான் கிஷனும் தொடக்க வீரராக களம் இறங்கி விளையாடி வருகிறார். இதனால் தொடக்க வீரர்களை தேர்வு செய்வதில் தேர்வு குழுவுக்கு கடும் சவால் காத்திருக்கிறது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

## மிட்செல் மார்ஷ் திடீர் விளக்கம்

உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் இந்தியாவை 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி 6-வது முறையாக ஆஸ்திரேலியா கோப்பையை வென்றது. இந்தியாவை ஆஸ்திரேலியா வீழ்த்தி கோப்பையை வென்ற பிறகு ஆஸ்திரேலிய அணியின் கேப்டன் பாட் கம்மின்ஸ், மிட்செல் மார்ஷ் உலகக் கோப்பையின் மீது தனது காலை வைத்து அமர்ந்திருக்கும் புகைப்படத்தை அவரது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக அவர் பேசியதாவது: பாட் கம்மின்ஸ் பகிர்ந்த அந்தப் புகைப்படத்தில் உண்மையில் எந்த ஒரு அவமரியாதையும் இல்லை. நான் எனது அந்த செயல் குறித்து அதிகமாக கவனம் கொடுக்கவில்லை. சமூக ஊடகங்களில் எனது இந்த செயல் குறித்து அதிக விமர்சனங்கள் வருவதாக அனைவரும் கூறியபோதும், நான் அது குறித்து அதிகமாக சிந்திக்கவில்லை. எனது செயலை பெரிதுப்படுத்தும் அளவுக்கு அதில் ஒன்றுமில்லை. உண்மையை சொல்ல வேண்டுமென்றால் நான் மீண்டும் அவ்வாறு செய்தாலும் அதனை அவமதிப்பாக நான் கருதமாட்டேன் என்றார்.

## வெஸ்ட் இண்டீஸ் வீரர் ஓய்வு



வெஸ்ட் இண்டீஸ் அணி சொந்த மண்ணில் இங்கிலாந்து அணிக்கு எதிராக 3 ஒருநாள் மற்றும் 5 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது. அதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் (3ஆம் தேதி) நடைபெற உள்ளது. இந்நிலையில் இந்த தொடருக்கான வெஸ்ட் இண்டீஸ் அணியில் இடம் பெற்றிருந்த விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான ஷேன் டவ்ரிச் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக திடீரென அறிவித்துள்ளார்.

32 வயதான ஷேன் டவ்ரிச் 2015ல் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமானார். இதுவரை மொத்தம் 35 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். கடைசியாக 2020ல் டிசம்பரில் நியூசிலாந்துக்கு எதிராக விளையாடினார். இதுவரை 1 ஒருநாள் போட்டியில் மட்டுமே விளையாடியுள்ளார். நாளை மறுதினம் தொடங்கவுள்ள இங்கிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் போட்டிகளுக்கான அணியில் இடம்பெற்றிருந்த நிலையில் திடீரென ஓய்வு முடிவை அறிவித்துள்ளார்.

## ஜூனியர் ஹாக்கி: இந்தியா தோல்வி

ஜூனியர் பெண்களுக்கான 10-ஆவது உலகக்கோப்பை ஹாக்கி போட்டி, சிலியில் நேற்று தொடங்கியது. மொத்தம் 16 அணிகள் பங்கேற்கும் இந்த போட்டி, 12 நாள்கள் நடைபெற்று டிசம்பர் 10-ஆம் தேதி நிறைவடைகிறது. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் கால்இறுதிக்கு தகுதி பெறும். இதில் குரூப் "சி'-யில் இடம் பிடித்துள்ள இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் கனடா அணியை வீழ்த்தியை தொடரை வெற்றியுடன் தொடங்கியது.

இந்நிலையில் இந்திய அணி தனது 2-வது ஆட்டத்தில் ஜெர்மனி அணியுடன் மோதியது. இதில் முதல் பாதி ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 3-2 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. பின்னர் நடைபெற்ற 2-வது பாதி ஆட்டத்தில் ஜெர்மனி அடுத்தடுத்து 2 கோல்கள் அடித்து 4-3 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இந்திய அணியால் பதில் கோல் அடிக்க முடியவில்லை. இதன் மூலம் முழு நேர ஆட்ட முடிவில் இந்திய அணி 3-4 என்ற கோல் கணக்கில் ஜெர்மனி அணியிடம் தோல்வியை தழுவியது. இந்நிலையில் இந்திய அணி இன்று பெல்ஜியம் அணியுடன் மோத உள்ளது.

## தூதரானார் ஏபி டிவில்லியர்ஸ்

இந்தியாவில் நடக்கும் ஐபிஎல் டி20 தொடர் போன்று தென் ஆப்பிரிக்காவிலும் டி20 தொடர் 'எஸ்ஏ20 லீக்' என்ற பெயரில் நடைபெற்று வருகிறது. அதில் ஐபிஎல் அணிகளின் உரிமையாளர்களே அணிகளை ஒப்பந்தம் செய்துள்ளனர். அதன்படி ஜோபர்க் சூப்பர் கிங்ஸ், டர்பன்ஸ் சூப்பர் ஜெயண்ட்ஸ், பிரிட்டோரியா கேப்பிட்டல்ஸ், எம்ஐ கேப்டவுன், பார்ல் ராயல்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஈஸ்டர்ன் கேப் ஆகிய 6 அணிகள் பங்கேற்றுள்ளன. இதன் முதலாவது சீசன் இந்த ஆண்டு முடிவடைந்தது. அதில் சன்ரைசர்ஸ் ஈஸ்டர்ன் கேப் கோப்பையை வென்றது.

இந்த தொடரின் 2-வது சீசன் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் தேதி தொடங்கி பிப்ரவரி 10ஆம் தேதி முடிவடைய உள்ளது. 6 நகரங்களில் போட்டிகள் நடைபெற உள்ளன. இதன் முதலாவது போட்டியில் சன்ரைசர்ஸ் ஈஸ்டர்ன் கேப் மற்றும் ஜோபர்க் சூப்பர்கிங்ஸ் அணிகள் மோத உள்ளன. இந்நிலையில் இந்த தொடருக்கான தூதராக தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி ஆட்டக்காரர் ஏபி டி வில்லியர்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

## நியூசி.,க்கு 332 ரன்கள் இலக்கு

நியூசிலாந்து கிரிக்கெட் அணி வங்காளதேசத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி கடந்த மாதம் 28-ந் தேதி தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் 310 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதனையடுத்து நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சை தொடங்கியது. வில்லியம்சனின் சதம் மூலம் நியூசிலாந்து அணி 317 ரன்கள் எடுத்து ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் நியூசிலாந்து அணி 7 ரன்கள் முன்னிலை பெற்றது.

இதனையடுத்து வங்காளதேசம் அணி 2-வது இன்னிங்சை தொடங்கியது. தொடர்ந்து ஆடிய வங்காளதேசம் அணி நேற்று 3-வது நாள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 212 ரன்கள் எடுத்தது. இந்நிலையில், 4-வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து ஆடிய வங்காளதேசம் 2வது இன்னிங்சில் 338 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதையடுத்து 332 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து அணி 2வது இன்னிங்சில் விளையாடி வருகிறது.

# 97 சதவீத ரூ.2,000 நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன
### ரிசர்வ் வங்கி தகவல்

**புது டெல்லி, டிச. 02-**
97.26 சதவீத 2,000 ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டில் புழக்கத்தில் இருக்கும் 2,000 ரூபாய் நோட்டுகள் வாபஸ் பெறப்படுவதாகவும், செப்டம்பர் 30-ம் தேதிக்குள் அந்த நோட்டுகளை வங்கியில் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம் என ரிசர்வ் வங்கி கடந்த மே 19-ம் தேதி அறிவித்தது.

அதன்படி பொதுமக்கள் தங்களிடம் உள்ள 2000 ரூபாய் நோட்டுக்களை வங்கிகளில் மாற்றி வந்தனர். இதையடுத்து, அக்டோபர் 7-ம் தேதி முதல் ரிசர்வ் வங்கியில் 2000 ரூபாய் நோட்டுகளை மாற்றிக் கொள்ளலாம் என ரிசர்வ் வங்கி அறிவித்தது.இந்நிலையில் 2000 ரூபாய் நோட்டுகள் தொடர்பாக ரிசர்வ் வங்கி கூறியிருப்பதாவது., கடந்த மே மாதம் வரை சுமார் 3.54 லட்சம் கோடி ரூபாய் மதிப்புடைய 2,000 ரூபாய் நோட்டுகள் வங்கிகள் மூலம் திரும்ப பெறப்பட்டுள்ளன. 97.26 சதவீத 2,000 ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

### கட்டுமான பணிகளை மேற்கொள்ள மாட்டோம்:
# சிதம்பரம் கோவில் தொடர்பான வழக்கில் பொது தீட்சிதர்கள் உறுதி

**சென்னை, டிச. 02-**
சிதம்பரம் கோவில் கட்டுமானம் தொடர்பான வழக்கு - பொது தீட்சிதர்களுக்கு ஐகோர்ட்டு கேள்வி எந்த கட்டுமானங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது என பொது தீட்சிதர்கள் தரப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

சிதம்பரம் நடராஜர் கோவிலில் 4 கோபுரங்களும் அமைந்துள்ள பகுதியில் எந்த அனுமதியும் பெறாமல் பொது தீட்சிதர்கள் கட்டுமானங்களை மேற்கொண்டு வருவதாகவும், இந்த கட்டுமானப் பணிகளுக்கு தடை விதிக்க வேண்டும் எனவும் கோரி இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் தரப்பில் ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு ஐகோர்ட்டில் நேற்று நீதிபதி மகாதேவன், நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது சிதம்பரம் நடராஜர் கோவிலுக்குள் எந்த அதிகாரத்தின் அடிப்படையில் கட்டுமானம் மேற்கொள்ளப்படுகிறது என பொது தீட்சிதர்களுக்கு நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

இதையடுத்து சிதம்பரம் கோவிலில் எந்த கட்டுமானங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது என பொது தீட்சிதர்கள் தரப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டது. இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், அறநிலையத்துறை ஆணையரின் மனுவுக்கு பதிலளிக்கும்படி பொது தீட்சிதர்கள் மற்றும் மத்திய அரசுக்கு உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை வரும் 6-ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# 3 ஆண்டுகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு
### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு

**சென்னை, டிச. 02-**
கடந்த 3 ஆண்டுகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழக விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய அவர், இளைஞர் மற்றும் மகளிர் திறன் மேம்பாட்டு பயிற்சி மூலம் கடந்த 3 ஆண்டுகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளதாக தெரிவித்தார். மேலும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் இஸ்ரோ, கூகுள் உள்ளிட்ட புகழ்பெற்ற நிறுவனங்களில் பணியாற்றுவதாகவும், இதற்கு கல்விக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவமே காரணம் என்றும் அவர் கூறினார்.

# சபரிமலையில் அரவணை பாயாசம் தயாரிக்க ஏலக்காய் சேர்க்கப்படாது
### திருவிதாங்கூர் தேவசம்போர்டு அறிவிப்பு

**சபரிமலை, டிச. 02-**
ஏலக்காய் சேர்ப்பது மூலம் அரவணை உட்கொள்ளும் பக்தர்கள் உடல் நலத்துக்கு தீங்கு ஏற்படலாம் என்று கேரள ஐகோர்ட் கூறிய நிலையில், சபரிமலையில் அரவணை பாயாசம் தயாரிக்க ஏலக்காய் சேர்க்கப்படாது என்று திருவிதாங்கூர் தேவசம்போர்டு அறிவித்துள்ளது.

சபரிமலை அய்யப்பன் கோவிலில் பக்தர்களுக்கு அரவணை பாயாசம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதில் அரிசி, சர்க்கரை, பழம், நெய் ஆகியவை அதிகளவு பயன்படுத்தப்படுகிறது. அதுதவிர ஏலக்காய், சீரகம் போன்ற பொருட்களும் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தநிலையில் கடந்த ஜனவரி 12-ந் தேதி ஏலக்காய் சேர்ப்பது மூலம் அரவணை உட்கொள்ளும் பக்தர்கள் உடல் நலத்துக்கு தீங்கு ஏற்படலாம் என்று கூறிய கேரள ஐகோர்ட், அதற்கு காரணமாக அதில் உள்ள பூச்சிக்கொல்லி மருந்துகளின் அளவை சுட்டிக்காட்டி எச்சரித்தது. அத்துடன் அதனை பயன்படுத்துவதற்கும் தடை விதித்து உத்தரவிட்டு இருந்தது. ஆனால் அவை உண்ணத்தக்கவை என்று மேல் முறையீட்டில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது.

இந்தநிலையில் தற்போது தினமும் 200 பேட்ச்சுகள் அரவணை பாயாசம் தயாரித்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து திருவிதாங்கூர் தேவசம்போர்டு தலைவர் பி.எஸ். பிரசாந்த் கூறியதாவது:- இனி மேல் அரவணை பாயாசத்தில் ஏலக்காய் சேர்க்கப்படாது. கடந்த ஓராண்டாக அவ்வாறு ஏலக்காய் சேர்க்காமல் தயாரிக்கப்பட்ட அரவணை பாயாசம் குறித்து எந்த புகார்களும் வராத நிலையில், தற்போது அரவணை பாயாசத்தில் ஏலக்காய் சேர்ப்பது தவிர்க்கப்பட்டு உள்ளது. அத்துடன் சீரகத்திலும் கிருமிநாசினி உள்ளதாக சிலர் புகார் தெரிவித்து வருகின்றனர். அதுகுறித்து ஆய்வு அறிக்கை கிடைத்த பின்னர், தேவைப்பட்டால் சீரகமும் தவிர்க்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# கெஜ்ரிவால் ராஜினாமா குறித்து கருத்து கேட்ட டெல்லி அமைச்சர்

**புதுடில்லி, டிச. 02-**
மதுபான கொள்கை வழக்கில் அமலாக்கத்துறை முன் ஆஜராகாமல் இருக்கும் டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் பதவியை ராஜினாமா செய்வதா, வேண்டாமா என வீடு வீடாக மக்களிடம் ஆம் ஆத்மி அமைச்சர் கருத்து கேட்டு வருகிறார்.

டில்லி அரசின் புதிய மதுபான கொள்கையில் நடந்த பணமோசடி தொடர்பான வழக்கில் டில்லி ஆம் ஆத்மி கட்சி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா கைது செய்யப்பட்டு திகார் சிறையில் உள்ளார். இந்த விவகாரத்தில் பண மோசடி தொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள அமலாக்கத்துறை டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு சம்மன் அனுப்பியுள்ளது. இதில் கெஜ்ரிவால் ஆஜராகாமல் உள்ளார். தனக்கு சம்மன் அனுப்பியது அரசியல் காழ்ப்புணர்ச்சி என குற்றம்சாட்டினர்.

இந்நிலையில் டில்லி ஆம் ஆத்மி அமைச்சர் கோபால் ராய், டில்லியின் கிழக்கு மாவட்டம், லஷ்மி நகர் உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாக சென்று பொது மக்களிடம் கருத்து கேட்டு வருகிறார். இதில் அரவிந்த் கெஜ்ரிவால் முதல்வராக நீடிப்பதா அல்லது ராஜினாமா செய்வதா, தற்போது வரை கெஜ்ரிவால் ஆட்சி தங்களுக்கு திருப்தியாக உள்ளதா உள்ளிட்ட விவரங்களை கேட்டு வருகிறார்.

### மணிப்பூரில் மர்மநபர்கள் அட்டூழியம்:
# துப்பாக்கி முனையில் வங்கியில் 18.85 கோடி ரூபாய் கொள்ளை

**உக்ருல், டிச. 02-**
மணிப்பூரில் வங்கிக்குள் புகுந்து ரூ.18.85 கோடியை துப்பாக்கி முனையில் மிரட்டி முகமூடி கொள்ளையர்கள் கொள்ளையடித்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மணிப்பூர் மாநிலம் உக்ருல் மாவட்டத்தில் பஞ்சாப் நேஷனல் வங்கியின் கிளை ஒன்று உள்ளது. நேற்று முன்தினம் மாலை 5.40 மணியளவில் சுமார் 10 பேர் அடங்கிய கும்பல் ஒன்று ஆயுதங்களோடு, முகத்தை துணியால் மூடிக்கொண்டு வங்கிக்குள் புகுந்தது. பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாவலர்களை தாக்கி உள்ளே நுழைந்த அந்த கும்பல், வங்கி ஊழியர்களை கயிறுகளால் கட்டி, கழிவறைக்குள் வைத்து பூட்டியது.

வங்கி மேலாளரை மட்டும் துப்பாக்கி முனையில் மிரட்டி, லாக்கரை திறக்கச் செய்து உள்ளே இருந்த பணத்தை கொள்ளையடித்தது. பின்னர் அந்த கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டது. ரூ.18.85 கோடியை அவர்கள் கொள்ளையடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக உக்ருல் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. கொள்ளை சம்பவம் முழுவதும் வங்கியில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகி உள்ளது. அதனடிப்படையில் போலீசார், குற்றவாளிகளை தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சோனியா, ராகுல், பிரியங்கா மீதான வழக்கு ஒத்திவைப்பு

**புதுடெல்லி, டிச. 02**
ஐ.டி. கணக்கு தொடர்பான சோனியா குடும்பத்தினருக்கு எதிரான வழக்கின் விசாரணையை டிச.13-ம் தேதிக்கு சுப்ரீம் கோர்ட் ஒத்தி வைத்தது.

ஆயுத வியாபாரி சஞ்சய் பண்டாரி தொடர்பான விவகாரத்தில் சோனியா, ராகுல் மற்றும் பிரியங்கா ஆகியோரின் 2018 - 19ம் நிதி ஆண்டுக்கான வருமான வரி கணக்கை, சாதாரண மதிப்பீட்டு பிரிவில் இருந்து, புலனாய்வு பிரிவுக்கு மாற்றி, வருமான வரித் துறை முதன்மை கமிஷனர் உத்தரவிட்டார்.இதை எதிர்த்து மூவரும் டில்லி ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி ஆனது. இதனை எதிர்த்து மூவரும் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்த மனு விசாரித்த நீதிபதிகள் டிச.13-ம் தேதிக்கு வழக்கை ஒத்தி வைத்தனர்.




● சென்னை கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் நேற்று, செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் நிறுவப்பட்டுள்ள திராவிடப்போராளி அயோத்திதாச பண்டிதரின் திருவுருவச்சிலையை, முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் க.பொன்முடி, எ.வ.வேலு, மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, என்.கயல்விழி செல்வராஜ் மற்றும் கி.வீரமணி, வைகோ, திருமாவளவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



● மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் 58 கிராம கால்வாயில் தண்ணீர் திறக்கக்கோரி விவசாயிகள் சங்கம் சார்பில் நடைபெற்ற உண்ணாவிரத போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று, முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் கே.தமிழரசன், ஐ.மகேந்திரன், கே.மாணிக்கம், பா.நீதிபதி, எஸ்.எஸ்.சரவணன், கா.தவசி மற்றும் வக்கீல் திருப்பதி, தமிழழகன், டாக்டர் விஜயபாண்டியன், வெற்றிவேல், ஏ.கே.பி.சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட ஏராளமான அ.தி.மு.க.வினர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.




● சென்னை தலைமைச்செயலகத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் மீட்புப்பணிகள் குறித்தும், வங்கக்கடலில் உருவாகியுள்ள புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கைகள் குறித்தும், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், வேலூர், இராணிப்பேட்டை ஆகிய 12 மாவட்ட கலெக்டர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

# மற்ற நாடுகளை விட இந்தியாவின் கார்பன் வெளியேற்றம் 4 சதவீதமாக உள்ளது: மோடி

துபாய், டிச. 02-

இந்தியாவின் கார்பன் வெளியேற்றம் 4 சதவீதமாக உள்ளது என்றும், இது சர்வதேச நாடுகளை விட இந்தியாவின் கார்பன் வெளியீடு மிக குறைவு என்றும் பிரதமர் மோடி தெரிவித்தார்.

உலக காலநிலை மாற்ற உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி நேற்று முன்தினம் மாலை துபாய் புறப்பட்டார். இந்த மாநாட்டில் இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் உள்ளிட்ட பலரும் பங்கேற்கிறார்கள். இதுதொடர்பாக வெளியுறவுத்துறை செயலாளர் வினய் குவாத்ரா கூறுகையில், பிரதமர் மோடி உச்சி மாநாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்கிறார். உலக காலநிலை மாற்ற உச்சி மாநாட்டின் தொடக்க அமர்வில் பிரதமர் தனது உரையை ஆற்றுவார். மேலும் பிரதமர் மோடி 3 உயர்மட்ட நிகழ்வுகளில் பங்கேற்கிறார் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் உலக காலநிலை நடவடிக்கை உச்சி மாநாட்டிற்காக பிரதமர் மோடி ஐக்கிய அரபு எமிரேட் வந்தடைந்தார் என்று வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "பிரதமர் நரேந்திர மோடி COP28 உலக காலநிலை நடவடிக்கை உச்சி மாநாட்டிற்காக ஐக்கிய அரபு எமிரேட் வந்தடைந்தார். துணைப் பிரதமரும் ஐக்கிய அரபு அமீரக உள்துறை அமைச்சருமான ஷேக் சைப் பின் சயீத் அல் நஹ்யான் விமான நிலையத்தில் வரவேற்றார். கூடுதலாக WCAS இல் அவரது பங்கேற்பு, பிரதமர் உலகளாவிய தலைவர்களுடன் சந்திப்புகளை நடத்துவார் மற்றும் காலநிலை நடவடிக்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சிறப்பு நிகழ்வுகளில் பங்கேற்பார்" என்று அரிந்தம் பாக்சி பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில் துபாயில் நடைபெற்ற சர்வதேச காலநிலை நடவடிக்கை உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது;- இந்தியாவின் மக்கள் தொகை உலக மக்கள் தொகையில் 17 சதவீதம் ஆகும். ஆனால் உலகளாவிய கார்பன் வெளியேற்றத்தைப் பொறுத்தவரை இந்தியாவின் கார்பன் வெளியேற்றம் 4 சதவீதமாக மட்டுமே உள்ளது. மக்கள்தொகை குறைவாக உள்ள மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் கார்பன் வெளியேற்றம் மிகவும் குறைவு. காலநிலை சார்ந்த இலக்குகளை அடைவதில் இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது.

இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.



● சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பாரம்பரிய கைவினைக்கலைகளில் ஆர்வம் கொண்ட இளைஞர்களை ஈர்த்து கலைத்தொழில் முனைவோர்களாக உருவாக்கும் "நீயே உனக்கு ராஜா" என்கிற திட்டத்தை, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்து, கைவினைத்திறன் பயிற்சிபெறும் இளைஞர்களுக்கு பெட்டகங்களை வழங்கினார்.

### 3,500 பேர் பயனடைவர்:

# சர்க்கரை ஆலை தொழிலாளர்களுக்கு தமிழக அரசு ஊதிய உயர்வு அறிவிப்பு

சென்னை, டிச. 02-

சர்க்கரை ஆலைகளில் பணியாற்றும் 3,500 தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இந்த ஊதிய உயர்வால் பருவக்கால தொழிலாளிக்கு தலா ரூ.32 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரை கிடைக்க வழிவகை செய்யும் என்று அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.,

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரிந்து வரும் சுமார் 3,500 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் நீண்ட நாள் கோரிக்கையினை பரிசீலனை செய்து ஊதிய உயர்வு வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை அதிகரிக்க பல ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பலனாக கரும்பு சாகுபடி பரப்பு 95,000 எக்டர் பரப்பிலிருந்து 1,50,000 எக்டர் பரப்பிற்கு அதிகரித்துள்ளதுடன், சர்க்கரை கட்டுமானமும் 9.27 சதவீதமாக அதிகரித்துள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு கிரைய தொகையும், தொழிலாளர்களுக்குரிய ஊதிய நிலுவைத் தொகையையும் உரிய நேரத்தில் வழங்கி வருகிறார்கள். கரும்பு விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் உற்பத்தி ஊக்கத் தொகை, சிறப்பு ஊக்கத் தொகை, கரும்பு நிலுவைத் தொகை, ஊதியம், போனஸ், அத்தியாவசிய செலவினங்களுக்கு மொத்தமாக ரூ.1223.59 கோடி அளவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கியுள்ளார்.

சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் கோரிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் கருணையுடன் பரிசீலனை செய்து, தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு ஊதிய உயர்வு வழங்கும் நோக்குடன், குழு ஒன்று அமைத்து, குழுவின் அறிக்கையினை பெற்று அதன் அடிப்படையில் தற்போது ஊதிய உயர்வு வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.

தற்போது வழங்கப்பட்டுள்ள ஊதிய உயர்வின் மூலம் தொழிலாளர்களின் அடிப்படை ஊதியம் 35 சதவீதம் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளதுடன், 30.09.2022 வரையிலான காலத்திற்கு நல்லெண்ண தொகையாக நிரந்தர தொழிலாளி ஒருவருக்கு ரூ.40,000 முதல் ரூ.50,000 மற்றும் பருவகால தொழிலாளிக்கு ரூ.,32,000 முதல் ரூ.40,000 வரையில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், 01.10.2022 முதல் தற்போது வரை உள்ள காலத்திற்கு நிலுவைத் தொகை ரொக்கமாக வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காஷ்மீரில் என்கவுண்ட்டர்: பயங்கரவாதி சுட்டுக்கொலை

ஸ்ரீநகர், டிச. 02-

காஷ்மீரில் பாதுகாப்பு படையினருக்கும், பயங்கரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச்சண்டையில் பயங்கரவாதி ஒருவன் சுட்டுக்கொல்லப்பட்டான்.

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் பாதுகாப்பு படையினர் மற்றும் காஷ்மீர் போலீசார் இணைந்து பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, பாதுகாப்பு படையினர், காஷ்மீர் போலீசாருடன் இணைந்து அப்பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர்.

அரிஹல் பகுதியில் பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டை நடத்தியபோது, அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்த தாக்குதலையடுத்து அப்பகுதியை சுற்றிவளைத்த பாதுகாப்பு படையினரும் பதிலடி தாக்குதல் நடத்தினர். இதில், பாதுகாப்புப்படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பயங்கரவாதி சுட்டுக்கொல்லப்பட்டான். என்கவுண்டர் நடந்த பகுதியில் மேலும் சில பயங்கரவாதிகள் பதுங்கி இருக்கலாம் என்பதால் தேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட, சுருக்கெழுத்து தட்டச்சர்கள் (நிலை-3) மற்றும் தட்டச்சு பணிக்கான பணி நியமன ஆணைகளை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், இயக்குநர் ந.அருள் உடனிருந்தனர்.

# வடதமிழகம், டெல்டா மாவட்டங்களில் அடுத்த 4 நாட்கள் கனமழைக்கு வாய்ப்பு

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, டிச. 02-

அடுத்து வரும் 4 தினங்களைப் பொறுத்தவரை, வடதமிழக மாவட்டங்களில் பரவலாக மிதமான மழை பெய்யக்கூடும். உள் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் மழை பெய்யக்கூடும். இன்று டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

டிசம்பர் 3-ம் தேதி திருவள்ளூர், சென்னை தொடங்கி கடலூர் வரையிலான வட கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழையும், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்" என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டலத் தலைவர் பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், "தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, நேற்று தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில், சென்னைக்கு கிழக்கு தென்கிழக்கே சுமார் 780 கி.மீ. தொலைவிலும், மசூலிப்பட்டினத்துக்கு தென்கிழக்கே சுமார் 940 கி.மீ. தொலைவிலும் நிலைகொண்டுள்ளது.

இது தொடர்ந்து மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுபெறக்கூடும். அதனைத் தொடர்ந்து வரும் டிசம்பர் 3-ம் தேதி புயலாக வலுப்பெறக்கூடும். பின்னர் இது வடமேற்கு திசையில் நகர்ந்து தெற்கு ஆந்திர மாநிலம் நெல்லூர் -மசூலிப்பட்டினத்துக்கும் இடையே, டிசம்பர் 5-ம் தேதி மாலை கரையைக் கடக்கக்கூடும்.

அடுத்து வரும் 4 தினங்களைப் பொறுத்தவரை, வடதமிழக மாவட்டங்களில் பரவலாக மிதமான மழை பெய்யக்கூடும். உள் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் மழை பெய்யக்கூடும். இன்று டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. டிச.3-ம் தேதி, திருவள்ளூர், சென்னை தொடங்கி கடலூர் வரையிலான வட கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழையும், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

டிச.4-ம் தேதி, சென்னை, வேலூர், ராணிப்பேட்டை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழையும், விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், திருவள்ளூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் அதி கனமழைக்கும் வாய்ப்பு உள்ளது.

டிச.3-ம் தேதி, திருவள்ளூர் தொடங்கி கடலூர் வரையிலான வட கடலோர மாவட்டங்களில் மணிக்கு 50 முதல் 60 கி.மீ வேகத்திலும், அவ்வப்போது 70 கி.மீ வேகத்திலும் பலத்த காற்று வீசக்கூடும். டிச.4-ம் தேதி, திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் மணிக்கு 60 முதல் 70 கி.மீ வேகத்திலும், அவ்வப்போது 80 கி.மீ வேகத்திலும் பலத்த காற்று வீசக்கூடும். கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் மணிக்கு 50 முதல் 60 கி.மீ வேகத்திலும், அவ்வப்போது 70 கி.மீ வேகத்திலும் பலத்த காற்று வீசக்கூடும்.

அடுத்து வரும் 4 தினங்களுக்கு தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள், வடதமிழக கடலோரப் பகுதி மற்றும் ஆந்திர கடற்கரைப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். வடகிழக்குப் பருவமழையைப் பொறுத்தவரை, கடந்த அக்டோபர் 1ம் தேதி முதல், இன்று வரையிலான காலக்கட்டத்தில் தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் பதிவான மழையின் அளவு 34 செ.மீ. இந்த காலக்கட்டத்தில் இயல்பு அளவு 36 செ.மீ. இது இயல்பைவிட 6 சதவீதம் குறைவு. சென்னையைப் பொறுத்தவரை, அடுத்த இரண்டு தினங்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும். டிச.3 மற்றும் 4ம் தேதிகளில் மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இந்த இருதினங்களில் பலத்த காற்றும் வீசக்கூடும்" என்று அவர் கூறினார்.

# சி.பி.எஸ்.இ. 10, 12-ம் வகுப்பு தேர்வுகள்: முக்கிய அறிவிப்பு

புதுடெல்லி, டிச.02-

மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் கீழ் நடத்தப்படும் 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்வு முடிவுகளின்போது, எந்த தனிப்பட்ட அறிவிப்பு அல்லது உயர் மதிப்பீட்டையோ வழங்காது என, மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாணவர்களிடையே தேவையற்ற போட்டி மனப்பான்மையை தடுக்கும் வகையில் முதலிடம் பிடித்த மாணவர்கள் என்பது போன்ற எந்த ஒரு தனிப்பட்ட மாணவர்களின் பட்டியலையும் சி.பி.எஸ்.இ. வெளியிடுவது வெகு காலமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஒட்டுமொத்தமாக அனைத்துப் பிரிவுகளில் அதிக மதிப்பெண் எடுத்தவர்கள் என்ற எந்த தகவலையும் சி.பி.எஸ்.இ. வெளியிடாது என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

"மதிப்பெண் வித்தியாசம் அல்லது மதிப்பெண்களின் மதிப்பீடு என எதுவும் வழங்கப்படாது. மேலும், ஒரு மாணவர் ஐந்து பாடங்களுக்கு மேல் படித்து தேர்வெழுதினால், அதில் சிறந்த ஐந்து பாடங்களைத் தீர்மானிக்கும் முடிவை அவர்களை உயர் கல்வியில் சேர்க்கும் நிறுவனம் அல்லது வேலைக்கு தேர்வு செய்பவர்களே தேர்வு செய்து எடுத்துக் கொள்ளலாம்" என்று சி.பி.எஸ்.இ. தேர்வுக் கட்டுப்பாட்டாளர் சன்யம் பரத்வாஜ் கூறினார்.

அதுபோல மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் தேர்வு முடிவுகளின் போது, மதிப்பெண்களின் சதவீதத்தை கணக்கிடவோ, அறிவிக்கவோ அல்லது தெரிவிக்கவோ இல்லை என்றும் பரத்வாஜ் கூறினார்.

உயர்கல்வி அல்லது வேலைவாய்ப்பில் மதிப்பெண்களின் சதவீதம் தேவைப்பட்டால், மாணவர்களை சேர்க்கும் கல்வி நிலையங்கள் அல்லது வேலை வாய்ப்பளிக்கும் நிறுவனங்களால் கணக்கிட்டுக் கொள்ளலாம்" என்று அவர் கூறினார்.

முன்னதாக, சி.பி.எஸ்.இ. ஆரோக்கியமற்ற போட்டியைத் தவிர்க்க தகுதிப் பட்டியல்களை வெளியிடும் நடைமுறையையும் நீக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.